பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 29 | வெள்ளிக்கிழமை | (11.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 175

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச அரசு தயார்!

## காணாமல் போனோர் விவகாரத்திற்கு மூன்று மாதத்தில் தீர்வு கூட்டமைப்பு எம்.பிக்களிடம் ஜனாதிபதி உறுதி!

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக் கால நிர்வாக சபையின் அடிப்படையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை களை நடத்துவதற்கு அரசாங்கம் இப்போது தயாராகவுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்றிரவு தெரிவித்துள்ளார்.**

- தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அமைப்பது தொடர்பாகவும்,
- அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவும்,
- காணாமல் போனோர் சம்பந்தமாகவும்,
- கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை தொடர்பகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் நேற்றைய சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் தெளிவாக விளக்கிக் கூறியிருந்தார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்களினால் முன்வைக்கப்பட்ட நான்கு கோரிக்கைகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கொள்கையளவில் பச்சைக் கொடி காட்டியிருந்தார்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில்,இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது தொடர்பான அடிப்படையில் இருந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வான் விபத்துக்குள்ளானது குடும்பஸ்தர் பலி

(பருத்தித்துறை)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வான் ஒன்று மின் கம்பத்துடன் மோதியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார். வடமராட்சி திக்கம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான இராசதுரை ராகவன் (வயது34) என்பவரே பலியானவராவார்.

நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழையையடுத்து வேகக் கட்டுப்பாட்டை இழந்த மேற்படி வாகனம் வீதியின் இடப்பக்கமாக இருந்த மின் கம்பத்துடன் மோதியது. இதன் போது வாகனத்தின் முன்பக்கத்தில் இருந்த பிரஸ்தாப நபரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தாகத் தெரியவருகிறது.

இதேவேளை இச் சம்பவத்தில் வேறு எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உயிரிழந்தவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து செயற்பட இணக்கம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தினுள் அசம்பாவிதங்கள் இடம் பெறுவதைத் தடுக்க எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற எதிர்க் கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடலைத் தொடர்ந்து இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐககிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜாதிக ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இவ் ஊடகவயலாளர் மாநாட்டில் மேலும்,

நாட்டின் உயர் பீடமாக மதிக்கப்படும் பாராளுமன்றத்தினுள் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் அநாகரிகமான செயல்கள் பாராளுமன்றத்தின் இறைமையைக் கேலிக் கூத்தாக்கியுள்ளது.

இது அரசின் பலவீனமாகவே கருதப்படுகின்றது. நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேண்டிய அரச தரப்பினரே பாராளுமன்றத்தினுள் அமளி துமளிகளை ஏற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சோமாலியாவில். 400 இலங்கையர்கள் அநாதரவான நிலையில்

(கொழும்பு)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஏமாற்றி அழைத்துச் செல்லப்படட இலங்கையர்கள் 400 பேர் சோமாலியாவில் அநாதரவாக விடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

இத்தாலிக்கு அனுப்புவதாகக் கூறி ஒவ்வொருவரிடமும் இருந்து நான்கு முதல் எட்டு இலடசம் ரூபாய் வரையில் பெற்றுக் கொண்ட நான்கு வியாபாரிகள் இவர்களை சோமாலியாவில் அநாதரவாக்க் கைவிட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் 400 பேரும் உணவு உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் பெரும் கஷடங்களை எதிர்கொண்டுள்ளதாகவும், தெரிவிக்கப்படும் இதேவேளை ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இவ்வாறு கைவிடப்பட்ட அனைவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களென்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)



அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்தியத்திற்கான கட்டளைத் தளபத் லெப்டினன் ஜெனரல் ஜேம்ஸ் எல்.கம்பலுக்கு இலங்கை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல நினைவுப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## பாராளுமன்றத்தின் ஊடாக தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது

### எதிர்க் கட்சிகளின் செய்தியாளர் மாநாட்டில் மாவை

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் ஊடாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நேறறு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற எதிர்க் கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியன் சார்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறுபான்மை அரசாங்கத்தின் கீழ் சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் சாத்தியமற்றதாய் இருக்கின்றது ,அன்று முதல் இன்று வரை தமிழரசுக் கட்சியின் முன்னோடிக் கட்சிகள் பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு முன்னுதாரணமாகச் செயற்பட்டு வந்திருக்கின்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறை எதுவும் நடைபெறாதபோதும் யாரைத் திருப்திப்படுத்த பிக்குகளை வைத்தியசாலையில் அனுமதித்தீர்கள்

### ஹெல உறுமயவின் அரச தரப்பு எம்.பி. கடிதம்

(கொழும்பு)

வண.அக்மீமன தயாரத்தின தேரர் எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்த போது பாராளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கு தனது துக்கத்தையும் வேதனையையும் அரச தரப்பில் இணைந்து செயற்படுபவரான ஹெல உறுமய எம்.பி புண்ணியானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஹெல உறுமயவின் எம்.பி. எலலாவெல மேதானந்த தேரருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றத்தின் உத்தரவுகளுகககு மாறாகவும் புத்தரின் போதனைகளுக்கு மாறாகவும் பௌத்த பிக்குகள் நடந்து கொள்வதைப் பார்க்கும் போது வெட்கமடைய வேண்டியுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு மாறாக ஐக்கிய தேசிய கட்சியின் ஒத்துழைப்புடன் வண. தயாரத்தின தேரர் பாராளுமன்றத்தினுள் அழைத்து வந்து சத்தியப்பிரமாணம் எடுக்கச் செய்தமை சட்டத்ததை மதித்து நடக்கும் ஒருகட்சிக்குச் சரியானதல்ல இப்பொழுது அக்மீமன தயாரத்தின

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.கட்டளைத் தளபதி இன்று யாழ்.வருகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்க இராணுவக் கட்டளைத் தளபதி ஜேம்ஸ் எல்.கம்பல் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் அவர் குடாநாட்டு நிலைமை குறித்து ஆராயவுள்ளார். இதேவேளை இராணுவத் தலைமையகத்திற்கு விஜயம் செய்த கம்பலுக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. இதன் பின்னர் இராணுவத் தளபதி லயனல் பலகல்லவுக்கும் ஜேம்ஸ்.எல்.கம்பலுக்குமிடையில் இரு நாடுகளுக்குமிடையிலான இராணுவ உறவுகள் குறித்து பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன.

இதேவேளை, நாளை ஆரம்பமாகவுள்ள பன்னாட்டு இராணுவப் பயிற்சியில் பங்கு கொள்வதற்காகவே கம்பல் இலங்கைக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-121)

## சிறு விளம்பரம்

### தேவை

லொறி பொடி அடிப்பவர், ரிங்கா ஓட்டுநர், மெக்கானிக் உதவியாளர், கூலியாட்கள் தேவை. சிவலிங்கம் மோட்டோர்ஸ் 77, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். (8560)

### மேசைப் பந்தாட்டப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் ஜேர்மன் நாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மூவர் யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் வைத்து மேசைப் பந்தாட்டப் பயற்சிகளை வழங்கி வருகின்றனர்.

நேற்று முன்தினம் ஆரம்பமான இப் பயிற்சி இன்று வரையான 3தினங்கள் இடம்பெறவுள்ளது. இதில 50ற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று வருகின்றனர்.(உ-19)

## உணவு விடுதிகள் தொடர்பில் புதிய சட்டதிட்டங்கள்

(கொழும்பு)

உணவு விடுதிகள் மற்றும் நடமாடும் உணவு விற்பனை நிலையங்கள் சார்ந்த புதிய சட்ட திட்டங்களை உடன் அமுல்படுத்தப் போவதாக உணவுக் கட்டுப்பாட்டாளர் எஸ். நாகையா தெரிவித்துள்ளார்.

தரங்குறைந்த உணவுப் பொருட்களை விற்பனை செய்து வருவோரை சட்டத்தின் பிடியில் சிக்க வைப்பதற்காகவே இத்தகைய புதிய சட்டதிட்டங்கள் அமுல் படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, கொழும்பு கொள்ளுப்பிட்டியாவில் உள்ள சர்வதேச தரத்திலான உணவு வடுதியொன்றில் பிரவேசித்து அங்குள்ள உணவுகளை பரிசோதித்த சுகாதார அதிகாரிகள் உணவில் புழுக்கள் இருந்ததைக் கண்டு பிடித்ததாகவும் எஸ்.நாகையா மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-60,10)

## அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணை?

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் கூடிய அனைத்து எதிர்க்கட்சிகளும் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்து பொதுக கையெழுத்துச் சேகரிப்பில் ஈடுபட்டன.

113 நாடாளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்தே இக்கையெழுத்து வேட்டை நடாத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி,. தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியன இது வரையில் இக்கையெழுத்துத் திரட்டலில் தமது கையொப்பங்களை இட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் ஜனநாயக விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் இந்தக் கையெழுத்துக்கள் அடங்கிய மனுவை ஜனாதிபதியிடமும், சபாநாயகரிடம் எதிர்க்கட்சியினர் இன்று சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பின்னர் இந்தப் பொது எதிர்க்கட்சி அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றையும் கொண்டு வரலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. (உ)





பொது மக்களின் சிரமங்களைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு தேவை ஏற்படும் நேரத்தில் வேண்டிய உதவிகளை இராணுவத்தினர் வழங்கி வருகின்றனர்.

இந்த வகையில் அண்மையில் முகமாலையூடாகப் போக்குவரத்துச் செய்த மக்களுக்கு உணவு வழங்கியதுடன் கொடிகாமம் வரை போக்குவரத்து வசதியையும் செய்து கொடுத்தனர்.

## குற்றப் பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

அனுமதியின்றி மணல் ஏற்றி வந்த மூவர் கடந்த வெள்ளியன்று யாழ். சிறு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

தமது குற்றங்களை ஒப்புக் கொண்டதன் பேரில் மூவரிடம் இருந்தும் 5 ஆயிரம் ரூபா குற்றப் பணமாக அறவிடப்பட்டதுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப் பட்டனர்.

(உ-19)

## இரத்ததான தினத்தன்று பேரணி

(கொழும்பு)

சர்வதேச இரத்ததான தினமான எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை சுகாதார அமைச்சு அலுவலக வளாகத்தில் இருந்து பேரணி ஒன்று ஆரம்பமாகி சுதந்திர சதுக்கத்தைச் சென்றடையவுள்ளது.

இப்பேரணியில், சுகாதார அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இரத்ததானம் செய்வோர், சமூகத் தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் பாதுகாப்பான இரத்தத்தை விநியோகிப்பதற்கென, நடவடிக்கை மேற்கொண்டு வரும் 4 சர்வதேச நிறுவனங்கள் இந்தப் பேரணிக்கு அனுசரணை வழங்கவுள்ளன.(உ-60,10)

## வருடாந்த உற்சவம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 8ஆம திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகன்றது.

ஆலயத்தின் தேர்,தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 1,2ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (உ)


## விவாத அரங்கு 3

விடயம்

A-9 பாதை தமிழர் கலாசாரத்திற்கு

**விடிவைத் தருமா? அல்லது அழிவைத் தருமா?**

*விவாத விடயத்தை முன்வைக்கிறார் வரணியூரைச் சேர்ந்த A. சங்கீதா.*

நடுவர்:-

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் பொன். கணேசமூர்த்தி (முகாமையாளர் மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை)

*உங்கள் வாதங்களை எழுதி அனுப்புங்கள்*

அனுப்பவேண்டிய முகவரி:-

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## வலம்புரி - சங்குநாதம்

### பிரதேச செய்தியாளர்கள் (பயிலுனர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில், பிரதேச செய்தியாளர்களை (பயிலுனர்கள்) நியமிப்பதற்கான விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.

- பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த. (சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- பயிலுனர் தரத்தில் மூன்று மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் - ஆர்வமும் காணப்படுமடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- பயிலுனராக தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- இலங்கையில் இருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையிலும், ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.
- ஏற்கனவே பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தரச் செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

### தகுதியானவர்கள்

முழுப்பெயர், நிரந்தரமுகவ்ரி, தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, விவாக நிலை, தொழில்புரியும் இடம், பதவி (இருப்பின்), கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, பிரதேச சபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) கல்வித்தகைமை, பிறதகைமை என்பவை உள்ளிட்டதாக தயாரிக்கப்பட்ட விண்ணப் பங்களை,

**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி, சங்குநாதம்,**
**இல: 15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு 15.06.2004க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ, அன்றி தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்*

### பிரதேச செய்தியாளர் (பயிலுனர்) தெரிவிற்கான பிரதேசங்கள்

*வலிகாமம்*

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர் மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தங்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
வண்ணார்பண்ணை
கொட்டடி
பாசையூர்
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
புன்னாலைக்கட்டுவன்
அச்செழு
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை
கரம்பொன்
நாரந்தனை
சரவணை

*தீவகம்*

மண்டைதீவு
அல்லைப்பிட்டி
வேலணை
புங்குடுதீவு
நயினாதீவு
நெடுந்தீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்

*வடமராட்சி*

கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரி மூலை
கொற்றாவத்தை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
பொலிகண்டி

*தென்மராட்சி*

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

*வன்னிப் பிராந்தியம்*

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முல்லைத்தீவு
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவ மடு

# மண்ணை மதித்த மாமனிதர்
# அமரர் பேராசிரியர் அ. துரைராஜா

**பேராசிரியர் அ.துரைராஜாவின் 10ஆவது நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**



பேராசிரியர் அ.துரைராஜா அமரராகிப் பத்து ஆண்டுகள் கழிந்து விட்டன என்பதை எம்மால் நம்ப முடியாமல் இருக்கின்றது. காரணம் அவரது பௌதிக உடல் இவ்வுலகில் இருந்த மறைந்து விட்டாலும், அவர் பற்றிய எண்ணங்கள், அவரது சிந்தனைகள் செயற்பாடுகள் என்பன எம் உள்ளங்களிலிருந்து இன்றும் நீங்காமல் இருப்பதேயாகும்.

1988 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தராகப் பதவியேற்க வந்திருந்தார்.

சிவந்த, அழகான, உயர்ந்த, புன்சிரிப்புடன் கூடிய அவரது தோற்றத்தினை ஒரு முறை கண்டவர்கள் ஒரு போதும் மறக்கமாட்டார்கள். உயர்ந்த மனிதனுக்கு உயர்ந்த பதவிகிடைத்தமை சாலவும் பொருத்தமானது என அன்று பலர் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

### பேராசிரியர் வகித்த பதவிகள்

பேராசிரியர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக மட்டும் கடமையாற்றவில்லை. பிரஜைகள் குழுவின் நிதானமிகு தலைவராக, ஊற்று நிறுவனத்தின் ஸ்தாபகராக, பொருளாதார மதியுரையகத்தின் தலைவராக, மண்ணின் மைந்தராக, மானுட நேயம் மிக்க மனிதராக, சாதாரண மக்களுடன் அளவளாவும் போது சாராசரி பொது மகனை, மாணவர்கள் மனங்களில் மதிப்புக்குரிய ஆசானாக குறிப்பாக சொல்லப் போனால் இம் மண்ணில் எல்லாமாக விளங்கிய ஒரு பெருந் தகையாளரே பேராசிரியர் அ.துரைராஜா.

### சர்வதேசப் புகழ் பெற்றவர்

கல்வியுலகில் இலங்கையில் மட்டுமன்றி சர்வதேசப் புகழ்பெற்றவராகவும் விளங்கினார். அவரது "துரை கோட்பாடு" பல பல்கலைக் கழகங்களில் இன்றும் கற்பிக்கப் படுகின்றது.

ந.பேரின்பநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

சர்வதேசப் பல்கலைக்கழகங்களுடன் அவர் கொண்ட தொடர்பினால், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றிற்கும் தொடர்பினை ஏற்படுத்திக் கொடுத்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சியில் உலகப் பல்கலைக்கழகங்களுக்கு இணையாக இருக்கவேண்டுமென விரும்பினார்.

குறிப்பாக எமது பிரதேசம் பற்றிய வரலாறு, விவசாயம், விஞ்ஞானம், பொருளாதாரம் போன்றவற்றில் அதிகளவு ஆய்வுகள் செய்யப்படவேண்டும் என விரும்பினார். ஆராய்ச்சி நூல்கள் வெளியிட முன்வந்தவர்களுக்கு பல்கலைக்கழக நிதியுதவி கிடைக்க வழி வகுத்தார்.

இவர் துணைவேந்தராகப் பதவி வகித்த காலம் சாதாரண காலம் அல்ல. கஷ்டங்கள் நிறைந்த காலமாகும். எனினும் அவர் தளராது நாளாந்தக் கடமைகளை ஆற்றி வந்துள்ளார். துணை வேந்தராக இருந்தும் கூட சாதாரண மக்களோடு மக்களாகத தானும் தினமும 21 மைல்கள் துவிச்சக்கர வண்டியில் பிரயாணம் செய்தே கடமைக்கு வந்தார். இதனை எமது எதிர்காலப் பரம்பரை நம்ப மறுக்கலாம்.

மக்களோடு எளிமையாகப் பழகியபடியால் மக்களின் கஷ்டங்களை உணர்ந்திருந்தார். இதனால் வறிய மாணவர்களின் கல்விக்கு உதவுவதற்குத் "துணைவேந்தர் நிதியத்தினை" ஆரம்பித்திருந்தார்.

### தமிழ் மண் மீது பற்றுக் கொண்டவர்

தமிழ் மண்ணின் மீது மிகுந்த பற்றுக் கொண்ட மாமனிதர் இவர். தமிழ் மக்களின் நலனுக்கும் உயர்ச்சிக்கும் சொல்லாலும், செயலாலும், துணிவாலும் உண்மையாகவும், நேர்மையாகவும் நெறிபிறழாது அரும்பாடுபட்ட உத்தமர் இவர். தனது தாய்மொழி, தனது இனம் ஆகியவற்றின் மீது பெரும் பற்றினை இவர் கொண்டிருந்தாரெனினும் ஏனைய இனம் மதம் ஆகியோரைச் சேர்ந்தோரையும் மதித்தார்.

அவரை நினைவு கூரும் போது எமது கண்கள் இன்றும் கலங்குகின்றன. எனினும் பேராசிரியரைப் போன்ற மாமனிதர்கள் தமது செயற்பாடுகளின் மூலமே மற்றவர்களை ஊக்குவித்தார்கள்.

அவரைப் போன்று நாமும் செயற்பட முயற்சித்து நமது பிரதேசத்தின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உதவுவோம் என திட சங்கற்பம் பூணுவோம். பேராசிரியர் அ.துரைராஜா அவர்களை எவ்வளவு ஆண்டுகள் சென்றாலும் இந்த மண்ணும், மக்களும் மறக்க மாட்டார்கள். □

## குற்றப் பின்னணி அமைச்சர்கள் விவகாரம்
## இரு அவைகளும் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

குற்றப் பின்னணியுள்ள அமைச்சர்கள் இராஜிநாமா செய்யவேண்டுமெனக் கோரி பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கோஷமிட்டதால் ஏற்பட்ட அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் மூன்றாவது நாளாக மீண்டும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் உப சபாநாயகர் தேர்தல் முடிவடைந்ததும் எதிர்க்கட்சியினர் குற்றப்பின்னணியுள்ள 6 அமைச்சர்களை அமைச்சரவையிலிருந்து நீக்கும் பிரச்சினையை முதலில் விவாதிக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

இதற்கு ஆளும் கூட்டணி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் சபையில் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

இதையடுத்து சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி பி.ப. 2.00 மணி வரையில் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

'கார்க்கில் போர் சம்பந்தமாக எழுப்பப்பட்ட பிரச்சினைக்குப் பதிலளிக்கும்படி பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை அவைத் தலைவர் அழைத்தார்.

அவரும் கார்கில் போரில் இராணுவத்தின் நிலை பற்றிய அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

பா.ஜ.க.உறுப்பினாகள் அவரைப் பேசவிடாமல் கோஷம் எழுப்பினார்கள். இதையடுத்துக் கூட்டத்தை சபாநாயகர் ஒத்திவைத்தார். மாநிலங்கள் அவையிலும் இந்தப் பிரச்சினை அமளியை ஏற்படுத்தியது.

பகல் 11 மணிக்கு அவை கூடியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பியதால், ஏழே நிமிடத்தில் கூட்டத்தை அவைத் தலைவர் ஒத்திவைத்தார்.

மீண்டும் அவை கூடிய போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டனர். கோஷத்தினிடையே பிரதமர் புதிய அமைச்சர்கள் மூன்று பேரை அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இதற்கிடையே கார்கில் போர் பற்றிய அறிக்கையைப் பாதுகாப்பு அமைச்சர் தாக்கல் செய்தார். தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷமெழுப்பியதால் அன்று முழுமைக்கும் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. (து)

## சோனியாவுக்கு அமைச்சரவை அந்தஸ்த்து
## பாரதிய ஜனதாக் கட்சி கடும் எதிர்ப்பு

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு அமைச்சரவை அந்தஸ்து அளித்து மத்திய அமைச்சரவைக் கோப்புகளைப் பார்க்க அனுமதித்தால், அது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் வீ.கே.மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

இது தொடர்பாக மத்திய சட்ட அமைச்சர் பரத்வாஜ் கூறியதாக வெளிவந்த செய்தியைச் சுட்டிக் காட்டிய அவர், சோனியா காந்தி எதற்காகப் பிரதமர் பதவியை விட்டுக் கொடுத்தார். பிறகு ஏன் கோப்புக்களைப் பார்க்க விரும்புகிறார் என்பதை விளக்க வேண்டுமென்றார்.

பிரதமரின் அந்தஸ்தைக் குறைகும் எந்த நடவடிக்கையையும் பா.ஜ.க. எதிர்க்கும் என்றும் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார். (து)




## கருணாநிதியின் பெருமுயற்சிக்கு தமிழ்ச் சங்கங்கள் பாராட்டு

(சென்னை)

தமிழ் மொழியைச செம் மொழியாக மத்திய அரசு அறிவிக்க பெரு முயற்சி எடுத்துக் கொண்டதற்காக தி.மு.க. தலைவரும், தமிழக ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான கருணாநிதிக்கு தஞ்சை, கரந்தை, தமிழ்ச் சங்கம், தமிழாசிரியர் கழகம், தமிழியக்கம் ஆகியவை இணைந்து பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இந்தச் சங்கங்களின் நிர்வாகிகளும் தமிழாசிரியர்களும் ஓய்வுபெற்ற தமிழாசிரியர்களும் நேற்று முன்தினம் கருணாநிதியைச் சந்தித்துப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (து)

**இந்தியச் செய்திகள்**



**தமிழ்நாடு, புதுவை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து கர்நாடகத்தில் இருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் பெறுவது குறித்து ஆலோசனை நடத்தினர்.**

## தமிழ் நாட்டிலும் கர்நாடகத்திலும் நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு நிலைவரம்
## ஆராய்ந்தறிய நிபுணர் குழு நியமனம்

காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையில் தமிழ் நாட்டிலும் கர்நாடகத்திலும் உள்ள நீர்த்தேக்கங்களில் உள்ள நீர்இருப்பு நிலவரம் பற்றி மத்திய நிபுணர் குழு இரண்டு நாட்கள் நேரில் ஆய்வு செய்யவுள்ளது.

காவிரியில் தண்ணீர் திறந்து விட உத்தரவிடக் கோரி தமிழ் நாட்டைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து முறையிட்டதையடுத்து இரு மாநிலங்களுக்கும் குழுவை அனுப்ப மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

மத்திய நீர்வளத்துறை அமைச்சகம், மத்திய நீர்வள ஆணையம் ஆகியவற்றில் ஆணையர் அந்தஸ்துக்கு நிகரான பொறியியலாளர்கள் அமைச்சகத்தின் மூத்த விஞ்ஞானி ஆகிய மூன்று பேரடங்கிய குழுவினர் இதற்காகச் சென்னை வழியாகப் பெங்களூர் செல்கிறார்கள்.

கர்நாடக மாநிலத்திலுள்ள கிருஷ்ணராஜ சாகர், கவினி, ஹேமாவதி, சாரங்கி ஆகிய நான்கு நீர்த் தேக்கங்களையும் டில்லி குண்டுலு கணக்கீட்டு மையத்தையும் பார்வையிட்ட பிறகு தமிழ் நாட்டில் மேட்டூர் அணையையும் இநதக் குழு பார்வையிடும். (து)

# ஜி-8 கைத்தொழில் நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்?

## சீனாவுக்கும் இந்தியாவுக்கும் முன்னுரிமை

(ஜோர்ஜியா)

தற்பொழுது நடைபெற்றுவரும் ஜி-8 கைத்தொழில் நாடுகளின் கூட்டத்தொடரில் உரையாற்றிய கனேடியப் பிரதமர், மற்றும் இத்தாலியப் பிரதமர் ஆகியோர் இந்நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.



கனேடியப் பிரதமர் போல் மார்டின் பேசுகையில், ஜி-8 நாடுகளின் எண்ணிக்கையை 20ஆக அதிகரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெருலஸ்கோனி உரையாற்றுகையில், வளர்முக நாடுகள் தொடர்பில் அதிகரித்து வரும் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு சீனாவையும், இந்தியாவையும் இவ்வமைப்பில் இணைத்துக் கொண்டு ஜி-9 அல்லது ஜி-10 என்று இதனை அழைக்க வேண்டும் என்று அறிவித்தார்.

அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி மற்றும் கனடா ஆகிய எட்டு செல்வந்த நாடுகள் பங்குபெறும் இம்மாநாட்டில் ஈராக் விவகாரம் தொடர்பில் நேட்டோவின் ஆதரவை ஜோர்ஜ் புஷ் கோரியபோது பிரெஞ்சு அதிபர் நேரடியாகவே முரண்பட்டார். (யே)

# விடுவிக்கப்பட்ட இத்தாலியர் வீடு வந்து சேர்ந்தனர்

(ரோம்)

சுமார் இரண்டு மாதங்களாகப் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டு நேற்று முன்தினம் அதிரடி இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் விடுவிக்கப்பட்ட மூன்று இத்தாலியரும் நேற்று இத்தாலிக்கு அழைத்து வரப்பட்டனர்.



உம்பேட்டோ கியூபட்டினோ, மௌரீசியோ அக்களியானா மற்றும் சல்வதோர் ஸ்ரெபியோ ஆகியோர் அவர்களது குடும்பத்தினராலும், உறவினர்களாலும் மற்றும் உயர்மட்ட அரசாங்க குழுவினராலும் மகிழ்ச்சியாரவாரத்துடனும் ஆனந்தக் கண்ணீருடனும் வரவேற்கப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட ஸ்ரெபியோவின் தந்தையார் இத்தாலிய தேசியக் கொடியை ஏற்றி முழந்தாளிட்டவாறு தனது மகனை வரவேற்றார். பின்னர் அக்கொடியால் விடுதலையான மூவரையும் போர்த்தினார். பணயக் கைதிகள் விடுதலையடைந்தால் தேசியக் கொடியை ஜனாதிபதிக்கு அன்பளிப்பாக வழங்கப் போவதாகக் கூறிக் கடந்த இரண்டு மாதமாக அவர் கொண்டு திரிந்தமை குறிப்பிடத்தக்கது. (யே)

# ரேகனின் உடல் வாஷிங்டனில் ஒரு இலட்சம் பேர் மரியாதை

(வாஷிங்டன்)

நேற்று முன்தினம் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனுக்குக் கொண்டுவரப்பட்ட முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரேகனின் பூதவுடலுக்கு ஒரு இலட்சத்திற்குமதிகமான பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.



ரேகன் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் பிரிட்டனின் புகழ்மிக்க பிரதமராக விளங்கிய "இரும்புப் பெண்" எனும் பெயரெடுத்த மாகிரட் தட்சர், தனது நெருங்கிய நண்பரான ரேகனுக்கு இறுதி மரியாதை செய்தார்.

முக்கிய பிரமுகர்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள றொட்டுண்டா காடனில் சாதாரண பொதுமக்களும் பெருந் தொகையாக வந்து அஞ்சலி செலுத்தினர். ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் செனட்டர் ஜோன் கெரி உட்படப் பல ஏராளமானவர்கள் இறுதியஞ்சலியில் கலந்து கொண்டனர்.

உபஜனாதிபதி டிக்சென்னி உரையாற்றுகையில், "அமெரிக்கர்களே மகிமைக்கும் பெருமைக்குமுரிய தலைவர் ஒருவர் இங்கே உறங்குகிறார்" என்று ஆரம்பித்தார்.

அல்செய்மர் வியாதியால் பீடிக்கப்பட்டு நரம்பு மண்டலம் பாதிப்படைந்து உறவினர்களைக்கூட இனங்காண முடியாமல் கடந்த 10 வருடமாக ரேகன் அவதிப்பட்டபோது அவரை விட்டகலாமல் அருகிலிருந்து கவனித்துவந்த அவரது மனைவி நான்சி ரேகனை எல்லோரும் புகழ்ந்தனர். கூட்டத்திலிருந்த ஒருவர் திடீரென எழுந்து நின்று "நான்சி கடவுள் உம்மை ஆசீர்வதிப்பார்" என்று உரக்கக் கத்தினார். (யே)

# மக்டொனால்டுக்கு எதிராக ஹொலிவூட்டில் திரைப்படம்

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

பல பில்லியன் டொலர்கள் பெறுமதி வாய்ந்த, அமெரிக்காவின்




சர்வதேச உணவு நிறுவனமான மக்டொனால்ட் நிறுவனத்திற்கு எதிராக அமெரிக்கர் ஒருவர் சினிமாப் படம் ஒன்றைத் தயாரித்துள்ளார்.

"சுப்பர் சைஸ் மி" என்ற தலைப்பிட்டு (மிகப்பெரிய உருவத்துடன் நான்) எடுக்கப்பட்டுள்ள இப்படம் 65 ஆயிரம் டொலர்கள் செலவில் எடுக்கப்பட்டு 6.2 மில்லியன் டொலர்களுக்கு விற்பனையாகியிருக்கிறது.

மோர்கன் ஸ்பர்லொக் எனும் படத் தயாரிப்பாளர் வேறு ஒரு திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டபோது தனது நான்கு நேரமும் மக்டொனால்ட் நிறுவனத்தின் சுவைமிகு கோழி இறைச்சி உணவை இரண்டு மாதங்களாக உண்டார். விளைவு பூதாகரமான உருவத்தைப் பெற்றார். இதனால் கடுப்படைந்த அவர் மக்டொனால்டின் தீய விளைவுகளை விபரித்துப் படமெடுத்தார். அதுவும் நல்ல வசூலைக் கொடுத்துள்ளது. (யே)

# எண்ணெய்க் குழாய்கள் தாக்குதல் 6 ஐரோப்பிய வீரர்கள் பலியாகினர்

(பக்தாத்)

ஈராக்கில் இஸ்லாமிய தீவிரவாதிகளால் நடாத்தபட்ட தாக்குதலில்



வெடி பொருட்களை அகற்றும் பணியிலீடுபட்டிருந்த ஆறு ஐரோப்பிய வீரர்கள் கொல்லப்பட்டனர்.

மூன்று போலந்து வீரர்களும் இரண்டு சுலோவாக்கிய வீரர்களும், ஒரு லத்விய வீரர்களுமே இறந்தவர்கள் ஆவர். மூன்று இத்தாலியரும் ஒரு போலந்துக்காரரும் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். அதன் பின்னர் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகும்.

இதேவேளை, ஈராக்கிற்கும் துருக்கிக்குமிடையிலான எண்ணெய் விநியோகக் குழாய்களைத் தீவிரவாதிகள் தாக்கிய போது, அதில் பாரிய தீ பற்றிக் கொண்டது. இது எண்ணெய் விநியோகக் குழாய்களில் நடாத்தப்பட்ட நான்காவது தாக்குதலாகும். (யே)

WORLD NEWS
உலக தரிசனம்

# சீனத் தொழிலாளர் பதின்மர் ஆப்கானில் சுட்டுக்கொலை

(ஹொங்கொங்)

ஆயுதம் தாங்கிய பயங்கரவாதச் சந்தேக நபர்கள் என்று கருதப்படுவோரால் 10 சீனக் கட்டடத் தொழிலாளர்கள் ஆப்கானிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்டதாக சீனாவின் அதிகாரபூர்வ செய்தி ஸ்தாபனமான சின்ஹுவா அறிவித்தது.



சுமார் 20 பேரடங்கிய ஆயுததாரிகள் குண்டுஸ் மாகாணத்தின் கட்டட நிர்மாணப் பகுதியொன்றில் அதிகாலை ஒரு மணியளவில் பிரவேசித்துக் கண்மூடித்தனமாகச் சுட்டதில் 10 சீனத் தொழிலாளர் உயிரிழந்ததுடன் 5 பேர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

அப்பகுதியில் பாதுகாப்புக் கடமைகளிலீடுபட்டிருந்த வீரர்கள் திருப்பிச்சுட்ட பொழுது பயங்கரவாதிகள் பின்வாங்கிச் சென்றதாகவும், அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பில் எதுவித தகவல்களும் இல்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் இடம்பெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னரே இப்பகுதிக்கு 100 சீனத் தொழிலாளர் கொண்டு வரப்பட்டதாகவும் இது தொடர்பில் சீன வெளியுறவு அமைச்சர் இன்னும் கருத்தெதையும் வெளியிடவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது. (யே)

## இன்று ஒரு தகவல்

# ஆசையும் அதிகாரமும்!

ஒரு ஊரில் ஒரு மன்னர் இருந்தார். அவர் பக்கத்து நாட்டின் மீது படையெடுக்க வேண்டுமென நினைத்துக் கொணடிருந்தார். அதையும் தனது நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஆசை. எப்போது படையெடுக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தார்.

இப்படியோசித்துக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு பெரியவர் அவரைத் தேடிவந்தார். அவர் அடிக்கடி வருவாா. இவரிடம் பேசிக்கொண்டிருப்பார். இப்போதும் அப்படித்தான் வந்தார். "என்ன மன்னா யோசனை?" என்றார். இவர் தனது யோசனையைச் சொன்னார். இதன்போது மன்னருக்குத் தாகமெடுத்தது. தண்ணீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. உடனே அங்கேயிருந்த ஒரு அரண்மனைப் பணியாளரைக் கூப்பிட்டார். "போய் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்றார்.

அந்தப் பணியாளர் போனார். ஒரு குவளையில் தண்ணீர் கொண்டு வந்தார் ராஜாவிடம் கொடுத்தார். ராஜா அதை வாங்கிக் குடிப்பதற்காக வாயினருகில் கொண்டு சென்றார். அந்த நேரம் பார்த்து "மன்னா கொஞ்சம பொறுங்கள் என்றார்" இந்தப் பெரியவர். ஆவலுடன் குடிக்கப் போன மன்னர் அப்படியே நிறுத்திக் கொண்டு பெரியவரைப் பார்த்தார்.

இப்போது அந்தப் பெரியவர் சொன்னார். "மன்னா! இப்போது உங்களைவிட வலிமையுடைய சக்தி உங்களுக்குத் தண்ணீர் கொடுக்கவிடாமல் மறுத்து விடுகிறது. என்றுவைத்துக்கொள்ளுங்கள். அப்படியென்றால் இப்போது இந்த ஒரு குவளை தண்ணீரை என்ன விலை கொடுத்து வாங்குவீர்கள்? என்று கேட்டார். "இப்போது எனக்கு இருக்கும் தாகத்திற்கு எனது அரசாங்கத்தில் பாதியையாவது கொடுத்து இந்தத் தண்ணீரை வாங்கத் தயங்கமாட் டேன்" என்றார் மன்னர்.

"சரி இப்போது அந்தத் தண்ணீரை குடியுங்கள்" என்றார் பெரியவர். மன்னர் ஆவலுடன் அந்தத் தண்ணீரைக் குடித்து முடித்தார். அதன் பின்பு சிறிது நேரம் தனது படையெடுப்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தின் பின் மீண்டும் இந்தப் பெரியவர் கேட்டார் "மன்னா நீங்கள் ஒரு வேளை தண்ணீரைக் குடித்து முடித்து விட்டீர்கள. இப்போது அந்தத் தண்ணீ உங்கள் உடலை விட்டு வெளியே வரக்கூடிய பாதை அடைபட்டுப் போயவிட்டது என்று வையுங்கள் அதை வெளியேற்ற எவ்வளவு செலவழிப்பீர்கள்?" என்று கேட்டார்.

மன்னர் யோசித்தார். "அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டுப்போனால் எனது அரசாங்கம் முழுவதையும் அதற்கு ஈடாகத் தரத் தயங்கமாட்டேன்" என்றார் இப்போது அந்தப் பெரியவர் சென்னார். "எந்த அரசாங்கத்தின் மதிப்பு ஒரு குவளை தண்ணீரின் அளவுக்குக் கூட இல்லையோ அந்த அரசாங்கத்தை அடைய வேண்டும் என்ற பேராசையில் மனிதர்கள் தமது சகோரதர்களுடனே சண்டையிடுகின்றனர். இதில் ஏதாவது அர்த்தமுள்ளதா? என்றார். மன்னருக்குப் இப்போது தான் அர்த்தம் புரிந்தது. மனதில் தெளிவு உண்டானது. தன் மனதில் உண்டான வெறியை விரட்டியடித்தார். அதன் பின் நிம்மதியாக ஆட்சி புரிந்தார்.

உயிருக்கு என்ன விலை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். ஆனால் அது இப்போது எவ்வளவு மலிவாகிவிட்டது. அதையும் யோசித்துப்பாருங்கள் ஆசை பேராசையாக மாறுகிறது. அதன் பின் வெறியாகிப் பைத்தியம் பிடிக்கிறது. இந்தக் காலத்து மனிதர்களுக்கு இரண்டு விதமான பைத்தியம் பிடித்திருப்பதாக ஒரு பெரியவர் சொல்கிறார். ஒன்று பணம் இன்னுமொன்று அதிகாரம் இதெல்லாம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்?

ஒரு சர்வாதிகார நாட்டில் மூவர் ஒரு ஜெயிலில் இருட்டு அறையில் பேசிக்கொள்கின்றனர். "நீ எப்படி இந்த ஜெயிலுக்கு வந்தாய்?" என்று கேட்டார். "இந்த நாட்டு ராஜாவை ஆதரித்து நான் பிரசாரம் செய்தேன் அதனால் கூட்டத்தில் தகராறு வந்துவிட்டது, கலவரமாகிவிட்டது. அதற்கு நான் தான் காரணம் என்று கைதுசெய்து. கொண்டு வந்து விட்டார்கள்" என்றார். "சரி நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று இவர் இன்னொருவரைப் பார்த்துக் கேட்டார். நான் இந்த நாட்டு ராஜாவை எதிர்த்துப் பிரசாரம் செய்தேன் அதனால் கைதுசெய்துவிட்டனர்" என்றார். சரி நீ எப்படி இங்கு வந்தாய்? என்று மூன்றாவது ஆளைப் பார்த்து இவர்கள் கேட்டனர். இதற்கு அந்த ஆள் மெதுவாக வெளிச்சத்திற்கு வந்து "நான் தான் இந்த நாட்டு ராஜா" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# துறைமுகங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு கடற்படையிடம்

## 15ஆம் திகதி முதல் அமுல்

(கொழும்பு)

நாட்டின் சகல துறைமுகங்களையும் பாதுகாக்கும் பொறுப்பு கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் அபிவிருத்தி மற்றும் விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்கானதைத் தொடர்ந்து துறைமுகங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இன்ரநசனல் ஓசன் ஓவநேசன் என்ற அமைப்பு வலியுறுத்தியதையடுத்தே அமைச்சர் துறைமுகங்களை கடற்படையினரிடம் ஒப்படைப்பதற்கு தீர்மானித்துள்ளார் என அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் காலித்துறைமுகம் கொழும்புத்துறைமுகம், திருகோணமலைத துறைமுகம், காங்கேசன்துறைத் துறைமுகம், பருத்தித்துறை துறைமுகம் ஆகியனவே கடற்படையினரின் பாதுகாப்பில் இருக்கும்.

இதேவேளை, துறைமுகங்களின் பாதுகாப்புத் தொடர்பாக கடற்படை தயாரித்த விசேட அறிக்கையொன்று நேற்றுமுன்தினம் முறைமுக அபிவிருத்தி மற்றும் விமானசேவைகள் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் துறைமுகங்களுக்கு கடற்படையினர் பாதுகாப்பு வழங்கவேண்டும் என விதந்துரைக்கும் உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 15ஆம் திகதியில் இருநது துறைமுகங்கள் யாவும் கடற்படையினரின் பாதுகாபபில் இருக்கும் என அமைச்சின் அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-60,10)

## பல்கலைக்கழக

# மானியங்கள் ஆ.குவுடன் கூட்டமைப்பு சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினைச் சந்தித்து கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி நிலை தொடர்பாக நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி, கனகசபை, பத்மநாதன், தங்கேஸ்வரி ஆகியோர் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினா ஜோசப் பரரராஜசிங்கம் தலைமையில கலந்து கொண்டனர்.

கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பது தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாகவும், அடுத்த ஆண்டு முதல் கிழக்குப் பல்கலைக்கழத்தில் மருத்துவபீடச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது எனவும் இச்சந்திப்பில் தீர்மானிக்கப்படடதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 8 மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தை மாத்திரம் கல்வியில் முன்னேற்றமடைந்த மாவட்டமாக பிரகடனப்படுத்திய நிலையை மாற்றி, அம்மாவட்டத்தையும் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## இராசி பலன்

**11.06.2004**
**(வைகாசி 29, வெள்ளிக்கிழமை)**
**நவமி மு.இ.6.49 வரை**
**உத்தரத்டாதி மு.இ.10.05வரை**
**இராகுகாலம் 10.22-11.52 மணிவரை**
**சுபநேரம் 5.52-7.22 மணிவரை**

**மேடம்**
காரிய அலைச்சல், வீண் மனஸ்தாபம், தனவிரயம், பிரயாணம்.

**இடபம்**
தெய்வ தரிசனம், எடுத்த கருமங்கள் நிறைவேறும், புதிய பொருள் சேர்க்கை, நற்கீர்த்தி.

**மிதுனம்**
அதிகாரம், தெய்வசிந்தை, பெருமையான சம்பவம், தொழில் விருத்தி.

**கடகம்**
சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு, முயற்சி தாமதம், புத்திசாதுரியம்.

**சிங்கம்**
மனக்குழப்பம், காரிய தடங்கல், வீண் பகை, பிரயாண பயம்.

**கன்னி**
களஸ்திர நன்மை, நண்பர்கள் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், தெய்வ தரிசனம்.

**துலாம்**
ஆரோக்கியம், சுவாரஸ்யம், காரிய சித்தி, விருந்துபசாரம்.

**விருச்சிகம்**
வியாபார சிந்தை, தாழ்ந்த சுபாவம், அபகீர்த்தி, முயற்சி தாமதம்.

**தனுசு**
தொழில் நன்மை, உறவினர் சந்திப்பு, ரோக நிலை, காரிய தாமதம்.

**மகரம்**
ஜனவசியம், நல்ல முயற்சி, போசன சுகம், தெய்வசிந்தை.

**கும்பம்**
அதிகவார்த்தை, எதிர்பாராத நன்மை, மனச்சஞ்சலம், உடல் நலக்குறைவு.

**மீனம்**
தெய்வ சிந்தை, சகோதரர் வழி நன்மை, கற்பனை மிகுதி, பொருட் சேர்க்கை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

# நாடாளுமன்ற அமளிதுமளி பற்றி மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்

## ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற சம்பவங்கள் குறித்த சரியான விளக்கத்தினை பொதுமக்களுக்கு வழங்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நடவடிக்கைக் குழு உறுப்பினரும், ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் கீழ்த்தரமான நடவடிக்கைகளை சகல தனியார் ஊடகங்களும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தமை அரசாங்கத்துக்குப் பெரும் அழுத்தத்தினை கொடுத்துள்ள நிலையில், இத்தகைய கோரிக்கையை விமல் வீரவன்ச விடுத்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கான 100 பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் நடவடிக்கைக் குழு முடிவெடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தகாத வார்த்தையால் தேரர் திட்டினார்

## அரச எம்.பி. புகார்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான கொலன்னாவ சிறீ சுமங்கள தேரர் தன்னைத் தகாத வார்த்தைகளால் திட்டியதாக அரசின் நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்தானந்த அளுத்கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தனது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயலெனவும் மகிந்தானந்த அளுத்கமகே விசனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான முறைப்பாட்டை நேற்று முன்தினம மாலை சபாநாயகா லொக்கு பண்டாரவிடம இவர் கையளித்துள்ளார். (உ-10)

# ரொனால்ட் வில்சன் ரேகன்

## வெள்ளை மாளிகை நினைவுகள்

அமெரிக்க இராணுவ பலத்தை அதிகிரிப்பது, அரச செலவீனங்க

பினார். தனக்குச் சத்திரசிகிச்சை செய்யவந்த வைத்தியரிடம் "நீரும என்னுடைய குடியரசுக்கட்சி ஆதர வாளராகவிருப்பீர் என்று நம்புகி றேன்" என்று தனக்கேயுரிய பாணி யில் நகைச்சுவையோடு வரவேற் றார் ரேகன்.

கோஷத்துடன் போட்டியிட்டு வோல் டரின் மாநிலம் தவிர்ந்த எல்லா மாநிலத்திலும மிகப்பெரும் வெற்றி பெற்றார். மீண்டும் 73வயதில் ஜனாதி பதியானார்.

அமெரிக்காவில் ஏழைகளின் நிவாரணங்களை நீக்கி அவர்களின் வயிற்றிலடித்தவர் ரேகன், என்று சிலர் குற்றம சுமத்துகின்ற போதும சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஏழைகளுக்கும் பணக்காரர்களுக் குமிடையிலான பாகுபடுகளைச் சமப்படுத்துவதில் அவர் முனைப் புடன் ஈடுபட்டார். அதன் காரண மாக அவருக்குப் பிற்பாடும் அவ ரது உபஜனாதிபதி, அமெரிக்க ஜனாதிபதியாக முடிந்தது.

### விண்வெளிப்போரும் சோவியத்வீட்சியும்

உள்நாட்டில் தனது பெயரை நிலைநிறுத்திய ரேகன், சோவியத் யூனியனுடன் சினேகபூர்வ உறவு களை வளர்த்துக்கொண்டு அமெ ரிக்கப் பாதுகாப்பைப் பலப்படுத்தி னர். 'ஸ்டார் வோர்" எனும் விண் வெளி யுத்தம் தொடர்பாக அவர் கடைப்பிடித்த கொள்கை காரண மாக சோவியத் ரஷ்யா மாற்றுக் கொள்கை ஒன்றை அறிவித்தது.

ளில் குற்றம் சுமத்தப்பட்ட போதும் 1994ஆம் ஆண்டு சுதந்திர விசாரணை யாளர் லோறன்ஸ வோள், ரேகன் மீதோ, அவரது உப ஜனாதிபதி சீனியர் புஷ் மீதோ குற்றம் சாட்ட எந்த ஆதரங்களும் இல்லை என்று பிர கடனம் செய்தார்.

வெற்றிகளுக்குப் பின்னாலிருந்த நான்சி, அல்செய்மர் வியாதியால் அவர் அவதியுற்ற 11வருடங்களும் அவரை விட்டு எங்கும் போக வில்லை. இதனால் அமெரிக்கர் களின் மத்தியில் அவரது மதிப் புப் பெருகியுள்ளது.

நேற்றைய இறுதி மரியாதை





ளைக் குறைப்பது ஆகிய இரண்டு கொள்கைகளோடு 1981ல் வெள்ளை மாளிகையின் ஜனாதிபதி அலுவ லகத்தில் புகுந்தார் ரேகன்.

அரசாங்கம் என்பது தீர்வல்ல! அரசாங்கம்தான் இங்கு பிரச்சனை யாகவிருக்கிறது" என்ற ரேகன், அமெரிக்காவுக்குச் சரிநிகர் சமான மாக நடைபோட்டுக்கொண்டிருந்த மாபெரும் சோவியத் ரஷ்யாவுக்கு எச்சரிக்கை ஒன்றையும் அனுப்பி னார்.

பிரச்சனைகளில் தலையிட நாம்

ரேகனின் வரிக்குறைப்பு நட வடிக்கை அமெரிக்காவில் பண

வீககத்தைக் குறைத்ததோடு அமெ ரிக்க ராணுவ பலத்தையும் உயர்த்

1989ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதிஅமெரிக்க விமானப் படைக்கு

களின் போது பொதுமக்கள் வெளிப் படையாகவே நான்சி ரேகனுக்கு

# எளிய ஆரம்பங்களும்



(இடமிருந்து) உப ஜனாதிபதி சீனியர் புஷ், ரேகன், முன்னாள் ஜனாதிபதிகள் ஜிம்மிக் கார்ட்டர், ஜெரால்ட் போர்ட், ரிச்சட் நிக்சன் ஆகியோர்.

தயங்குவது, அது எங்களுக்கு முடி யாத காரியம் என்பதனால் அல்ல! என்பதை அது தொடர்பானவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று கூறினார்.

தியது. அமெரிக்க பங்குச்சந்தை யின் மையமான வோல்ஸ்ரீட்டில் வியாபாரம் பல்கிப் பெருகியது. அது அடுத்த எட்டுவருடங்களுக் குப் தொடர்ந்து பெருகியது.

'பெரஸ் ரொய்க்கா' எனும் புதிய சீர்திருத்தக் கொள்கைப் பிரகட னம் சோவியத் அதிபர் மிக்கா யெல் கொர்ப்பச்சேவால் அறிவிக கப்பட்ட பொழுது, அமெரிக்கா

**பேதுரு யேசுதாசன்**
**இறுதிப் பகுதி**

மௌனமாகப் பார்த்துக்கொண்டி ருந்தது.

இறுதியில் சோவியத் யூனியன் சுக்குநூறாகச் சிதறி கம்யூனிசப் புரட்சி குழிதோண்டிப் புதைக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து கம்யூனிஸ நாடுகள் பல் ஜனநாய கததை நோக்கி வந்தன. அமெரிக்கா உலகின் தனிவல்லரசாக நிமிர்ந்தது.

### ஊழல் விவகாரம்

நிக்கரகுவாவில் சண்டினிஸ்ர ஆட்சிக் கெதிராத ரேகன் நிர்வாகம் கென்ராஸ் கிளர்ச்சியாளர்களுக்கு

சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன் றின் வாயிலில் நின்று சலியூட் செயதபடி அவர் வெள்ளை மாளிகை வாழ்வை நிறைவு செய்தார்.

### அல்செய்மர்வியாதியும் வாழ்வின்அஸ்தமனமும

1993ஆம் ஆண்டு மிகவும் உருக்கமான முறையில் நாட்டு மக்களுக்கு ரேகன் உரையாற்றி னார். அல்செய்மர் எனும் வியாதி யால் தாம் பீடிக்கப்பட்டிருப்பதாக வும் தமது இறுதி நாட்களை எண் ணிக்கொண்டிருப்பதாகவும் அறி வித்த ரேகன், அதன் பிற்பாடு அந்த நோயின் தாக்கத்தால் நரம்பு மண் டலம் பாதிக்கப்பட்டு படுத்தபடுக்கை யாகவே கிடந்தார்.

### நான்சியும் ரேகனும்

சுமார் 52வருட காலம் கண வன் மனைவியாக வாழ்ந்த இவ் விருவரும அமெரிக்காவின் உதார

மரியாதை செய்தனர்.

ரேகன் ஜனாதிபதியாக விளங் கிய எட்டு ஆண்டுகளும், அமெ ரிக்காவில் நேர்த்தியான உடை அணிபவருக்கான விருதை அவரே வென்றார். அது நான்சி ரேகனின் கரிசனை மிக்க கவனிப்புக்கு உதாரணம் என்றுகூறி ஒருவர் கண்ணீர்விட்டு அழுதார்.

என்னுடைய 12வயதிலிருந்து நான் ரேகனின் ரசிகையாக இருக் கிறேன். என்னுடைய ஜனாதிப தியை நான் இழந்துவிட்டேன். என்று கூறி ஒரு பெண்மணி அழுதார்.

நேற்றையதினம் முழுவதும் அமெரிக்கர்கள் சோகம் மூடிய முகங்களோடு அமெரிக்க வீதி யெங்கும் காணப்பட்டனர்.

அவருடைய சக தோழர் ஒருவர் கூறுகையில், 'அவர் எப்பொழுதும் எங்களில் ஒருவராகவே இருந்தார்' என்று சொன்னார். இன்று 20ஆம் நூற்றாண்டின் மிகப்பிரபலமான

# வலிய சாதனைகளும்

உதவக்கூடாது என்று காங்கிரஸ் முடிவு செய்த போதும், ரேகன் மறைமுக உதவி வழங்கினார். சி. ஐ.ஏக்குச் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கி னார் என்ற குற்றச்சாட்டுக்கள் சுமத தப்படுகின்றன.

தவிரவும் ஈரானுக்கு ஆயுதங் களை விற்பனை செய்த ஊழல் விவகாரங்களில் அவருககுத் தொடர் பிருந்ததாக அவரது எதிராளிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

1988இல் அவர் வெள்ளை மாளிகையைவிட்டு வெளியேறிய பொழுது லெபனானில் பணயம் வைக்கப்பட்டிருந்த அமெரிக்கர் கள் விடுதலை செய்யப்படாமலே யிருந்தனர். ஆயினும் அவர் ஒரு சிறந்த அமெரிக்கராக விளங்கினார், என்பதை அமெரிக்கர்கள் மறுதலிக்க வேயில்லை. அவரது செயற்பாடு களிலும் அமெரிக்காவை முதன் மைப்படுத்தும் அவரது கொள்கை யிலும் திருப்தியடைந்த மக்கள, அவரது உப ஜனாதிபதியை மீண்டும் ஜனாதிபதியாக்கினர்.

அவர் மீது ஊமல் விவகாரங்க

தம்பதிகளாக வர்ணிக்கப்படுகின் றனா. காலம் முழுவதும் ரேகனின

ஜனாதிபதிகளுள் ஒருவர் என்று கருதப்படம் றொனால்ட் வில்சன் ரேகனின் பூதவுடல் மண்மாதா விடம் கையளிக்கப்படும். □



ஜனாதிபதியாக வந்த சிறிது காலத்திலேயே ஜோன் ஹிங்கிலி என்பவரால் வாஷிங்டன் ஹொட் டேலில் சுடப்பட்டார். ஆயினும் அதிலிருந்து அவர் உயிர்தப்

இரண்டாவது தடவையும் அமெ ரிக்காவின் முந்நாள் உப ஜனாதி பதி வோல்டர் மொன்டேலை எதிர்த்து "மீண்டும் அமெரிக்கா வில் அதிகாலை விடிகிறது" எனும்



1988ஜனவரி 20ல் வெள்ளை மாளிகையை விட்டு விமானப்படை ஹெலிக்கொப்டரில்வெளியேறுமுன் அதிகாரிகளுக்கு சலியூட் செய்யும் ரேகன்.

வெள்ளி முற்றம்

# புதிய உறவுகள்

சந்திரகாந்தா

முதியோர் இல்லத்தின் வாசலில் பேருந்து வந்து நின்று நடத்துனர் இது தான் யோகசுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் என்று கூறியதும் ஒரு நடுத்தர வயதுப் பெண்ணும் அவளது மகனும் இறங்கினார்கள்.

வாசல் கேற்றுக்கு அவர்கள் வந்ததும் காவலாளி கேள்விக்குறியுடன் அவர்களை நோக்கினான்.

"இரத்தினம்மா என்ற மூதாட்டியைப் பார்க்கனும்..."

"எங்கட பாட்டிக்கு" என்று தவிப்போடு கூறினான். இளைஞன் சிறுவன் "நங்க யாரு?" காவலாளி பதில கேள்வி கேட்டான்.

"நான் கமலா... அவவோட மகள் ... இவன் என்னுடைய மகன் ரவி இரத்தினம்மா இவனுக்குப் பாட்டி..."

"நீங்க எல்லாம் இருந்து கொண்டு அநாதரவான முதியோர்களைப் பராமரிக்கிற முதியோர் இல்லத்திற்கு ஏன்

எங்களையும் அழைச்சிருந்தாங்க.. . பிரார்த்தனை முடிந்ததும் பிரசாதம் தந்தனுப்பினாங்கள்... வீட்டுக்கு வந்து பிரசாதத்தைச் சாப்பிட்டோம். பிரசாதம் சுற்றி வந்து பேப்பரிலதான் இல்லத் தலைவர் கந்தசாமி ஐயாவுடைய பேட்டி பிரசுரமாகியிருந்தது... அதிலே முதியோர்களின் படங்கள் இருந்தன. அதிலே பாட்டியின் படம் இருந்தததை இவன் தான் கண்டான ... எங்கள் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சி..."

"அது சரி பாட்டியையேன் அநாதரவாக விட்டீங்க... பெத்தவங்களை இறுதிவரை பார்ப்பது எல்லோரினதும் கடமையல்லவா?" தர்மகலா அவர்களை நோக்கினாள். பதில் சொல்ல முடியாத சங்கடத்துடன் கமலா தலை குனிந்தாள். "எல்லாம் இந்தக் கொடிய யுத்தத்தினாலையும், இடப் பெயர்வினாலும் தான்..." செடுமூச் செறிந்தாள்.

ரவியின் மனதை தர்மகலாவின்

எனக்கும் ஒரே பயமாக இருந்தது... அண்டைக்குத்தான 'செல்' மரண பயத்தை ஏற்படுத்தி கலங்க வச்சுது... ஒண்டும் செய்யேலாமல் பாட்டியை விட்டுவிட்டு வெளிக்கிட்டம். பாட்டி தவண்டு தவண்டு வாறதைத் திரும்பிப் பார்க்க முடியாமல் கனத்த நெஞ்சோட தெற்கு நோக்கி நடந் தம். வாழ்க்கையில மறக்க முடியாத ஒருநாள்...

வழியெல்லாம் சனம்... சன்னதி கோயில் தேர், தீர்த்தத் திருவிழாவில கூட இவ்வளவு நெரிசலைக் கண்டதில்லை... உச்சிலம்மன் கோயிலிலிருந்து பக்கத்தில் இருக்கிற வெல்லன் பிள்ளையார் கோயிலடிக்கு வாறதுக்கே ஒரு மணித்தியாலம் எடுத்தது... நாவரண்டது. தண்ணிகுடிக்கிறதிலயும் நெருக்கடி... ஒருநாளும் நான் இவ்வளவு தூரம் நடக்கவில்லை. ...நல்லாக் களைச்

தோன்றும். ஆச்சியிடம் என்ர சந்தேகத்தைப் பற்றிக் கேப்பன்... 'குட்டியா... தெய்வக் குற்றம் சும்மா விடாது... சாமிங்களோட பகிடி விடாதை...' என்று வெருட்டுவா. எனக்குச் சிரிப்பு வரும். பழிவாங்கிற கடவுள் எண்டா அந்தக் கடவுள் எங்களுக்கு தேவையில்லை எண்டு நினைப்பன்...!

கடவுளுக்கு நேர்த்தி வைக்கிறதில ஆச்சியைக் கேட்டுத்தான். எனக்குக் காய்ச்சல் தலையிடி வந்தாலும் எல்லாக் கோயிலுக்கும் நேர்த்தி வைப்பா...

பாட்டி முந்தாணையில முடிஞ்சு வச்சு கோயிலுக்குப் போகிற போது கற்பூரத்திற்கும், ஐஸ்பழத்

தார். 'கிபிர்'குண்டு வீச்சில் உருத்திரபுரத்தில் நால்வர் பலி அவர் வாசிப்பதை இன்னும் சில முதியவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

விடுதியில் பராமரிப்பாளர் அவர்

வட்டீங்க...?" என்று கேட்டபடி கேற்றைத் திறந்தான். "முன்னுக்கு அலுவலகம் இருக்கு- அங்க போய் கேளுங்கோ.. குட்டிப் பாட்டி சொல்லுவாங்க..."

கமலாவும் மகன் ரவியும் அவ் இல்லத்தில் காலடி எடுத்து வைத்த போது புத்துணர்வு ஏற்பட்டது. கிளிநொச்சி நகரிலிருந்து நீண்டதூரம் காட்டுக்குளளாக வந்தபின் அவர்கள் மிகவும் களைத்துப் போயிருந்தார்கள். சுற்றி அடைக்கப்பட்டிருந்த அந்த முதியோர் இல்ல வளாகததில் காலடி எடுத்து வைத்த போது இவ்வளவு அழகான ஒரு சோலையை அவர்கள் எதிர்பார்க்கவிலலை. எங்கும் பச்சைப் பசேலென்று பசுமையாகக் காட்சி அளித்தது. வாசலில் இருந்து திருவடி நிலையத்திற்குச் செல்லும் இருமருங்கிலும் பூமரங்கள் சுகந்தமாய் வரவேற்றன. வளாகம் எங்கும் பயன் தரு தென்னை மரங்கள் புதிய பாளைகளைத் தள்ளியபடி வரவேற்றன. பலா, மா, தோடை, திராட்சை என பயன தரு மரங்கள் அவற்றிற்கிடையே குளிர்மையாய் குலை தள்ளியிருந்த வாழைகள்!

சுவாமிகளின் திருவடி நிலையம் சிறியதாக இருந்தாலும் எளிமையாகவும் எமது கலாசாரத்தைப் பேணுவதாகவும் அமைந்திருந்தது. அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர் ராஜா' அவர்களை வரவேற்று அன்போடு விசாரித்தார்.

"இரத்தினம்மா என்ற மூதாட்டி..."

"இங்கே எல்லோருமே முதியவர்கள் தான்..." என்று சிரித்தபடி அந்த இளைஞன் கூறினான். "இரத்தினம்மா இங்கே இருப்பதாக உங்களுக்கு எப்படித தெரிய வந்தது?"

"அது ஒரு சுவையான கதை..." எங்கட அம்மாவைத் தேடி நாங்கள் பல இடங்களில் அலைந்தோம்... வானொலியிலும் சொந்தங்களைத் தேடி நிகழ்வில் விசாரித்தோம். பலன் கிடைக்கவில்லை..."

"அப்புறம்..."

"பாட்டி செத்துப் போயிட்ட என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்... என்று விசும்பினான் ரவி. "பாட்டி இப்ப எங்கே இருக்கிறார்?" அவனுக்குப் பாட்டியைக் காணவேண்டும் என்ற தவிப்பு.

"பாட்டி விடுதியில இருக்கிறா... அவ இப்போது எங்கட பாட்டி" என்று கண் சிமிட்டினாள் லிகிதர் தர்மகலா. அவன் அழுது விடுவான் போலிருந்தது. குட்டிப் பாட்டியை நாங்கள் விட மாட்டம்.

"ம் இந்தக் காலத்தில் பெத்த பிள்ளைகளையே நம்ப முடியேல.. இறக்கை முளைச்சதும் உதறிவிட்டு பறந்து போயிறாங்கா... சின்னப் பிள்ளையாக இருந்த காலம் தொட்டு வளர்ந்து தம்மை உருவாக்க அவங்க பட்ட கஷ்டங்களையெல்லாம் மறந்திடுறாங்க... வயோதிபத்தில் அவங்களைப் பார்க்கிற கடமை என்கிறத மறந்திடுறீங்க என்று கணக்காளர் மகேஸ்வரி கூறினார். "தப்புத்தான்... சூழ்நிலை அப்படி... "கமலாவுக்கு அந்தரமாக இருக்கிறது.

சிறிது மௌனத்தின் பின் கமலா தொடர்ந்தார்.

இந்த இல்லத்திற்குப் பொறுப்பான ஐயா பத்திரிகையில் பேட்டி கொடுத்திருந்தார்.... அதுகூட எங்களுக்கும் பார்க்கக் கிடைக்கலை... போன சனிக்கிழமை சுவாமிகளின் ஆயிலிய தினம் ... எமது அடுத்த வீட்டில் பிரார்த்தனை நடாத்தினாங்க.

கேள்வி உலுப்பிவிட்டது. பாட்டியைப் பிரிந்து வந்தபோது அவனுக்குப் பன்னிரண்டு வயது... ஐந்து இலட்சம் பேர் ஒரே இரவில் திடீரென்று இடம் பெயர்ந்த அந்தக் கொடிய நினைவுகளில் முழ்கினான் அவனுக்குப் பாட்டியை நினைக்க அழுகை அழுகையாக வந்தது.

நாங்கள் இரவோடு இராவாக

சுப் போனன்... கையில் பை வேறு ... சுமக்கேலாமல் சுமந்து கொண்டு கிளாலிக்கரைக்கு வரவே ஒருநாள் பிடிச்சிது...

கிளாலியில கொக்குத் தவம் இருந்தம். அங்கேயும் செல் வந்து விழு ந்து. நாலஞ்சு பேரைச் சாகடிச் சிது...

எங்கட கண்ணுக்கு முன்னா லேயே உடல் சிதறி ஒரு நொடியில் சா வைத தழுவியதைப் பார்க்க




திற்கும் புறம்பாகவும் காசு தருவா. அப்பா அம்மாவை சரியான நப்பி... ஒண்டுக்கும் காசு தராயினம்... தாங்களாக ஏதும் வாங்கித் தந்தாச்சரி... பாட்டி தாற காசில நான் இரண்டு ஐஸ்பழம் குடிப்பன்...கற்பூரம் கன பேர் கொழுத்துவினம் தானே?

பாட்டியை விட்டுவிட்டு வந்ததில எல்லாருக்கும் கவலை தான்... திரும்பி ஊர் போக கிடைச்சால் எலும்பு எண் டாலும்

களைக் குட்டிப்பாட்டியிடம் அழைத்துச் சென்றார். இரத்தினம்மா பாட்டிக்கு குட்டிப்பாட்டி என்றுதான் செல்லப் பெயர்.

பாட்டியைக் கண்டதும் மகளும்,பேரனும் விம்மத் தொடங்கி விட்டார்கள். பாட்டியின் கண்கள் பனித்தாலும் ஏதோ ஒரு வைராக்கியத்துடன் கல்லாக அமர்ந்திருந்தார்.

இதற்கிடையில் குட்டிப்பாட்டியின உறவினர்கள் வந்ததை அங்கு வந்த இல்லச் செயலாளரும் அறிந்து பெண்கள் விடுதிக்கு வந்தார். மூதாட்டிகள் அவரை அன்போடு வரவேற்றார்கள். பீரிட்டு வரும் அழுகையை அடக்கிக் கொண்டு அமர்ந்திருந்த பாட்டியிடம் "பாட்டி சந்தோசம் தானே?... உங்கட மகள்,பேரன் எல்லோரும் வந்திருக்கினம்..." என்றார் செயலாளர் முருகானந்தன்.

பாட்டி பேசாமலிருந் தாள். மகளும், பேரனும் கொண்டு வந்த பிஸ்கட், இனிப்புவகைகளைத் தொடக்கூட இல்லை. அவர்கள் இன்னும் அழுது கொண்டிருந்தார்கள். பாட்டி செழிப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தது அவர்களுக்கு ஆனந்தமாகவும் இருந்தது. எனினும் அவளது மௌனம் குற்றமுள்ள இவர்களின் மனதை நெருடியது.

"அழாதிங்க... வாங்க இதில அமர்ந்திருந்து கதையுங்க... பாட்டிக்கு கோபம் மாறவில்லைப் போல..." என்றார் செயலாளர் முருகானந்தன்.

"பாட்டி உங்கட பேரன் ரவி வந்திருக்கேன்... தெரியுதா?" பாட்டிக்கு பார்வைக் குறைவு என எண்ணிய ரவி கேட்டான்.

"போடா போக்கற்றவனே... எனக்கு கண் இரண்டும் தெரியும்... ஐயா கொழும்புக்கு அனுப்பி ஒப்பரேசன் செய்விச்சவர்...ம்... நீங்கள் எல்லாம் ஏன் வந்தீங்க...?"

"உங்களக் கூட்டிப்போகத் தான் பாட்டி?"என்றபடி ரவி பாட்டியின் கைகளைப் பற்றியபடி குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதான்.

"எங்கேடா?" பாட்டி வெடுக்கென்று கேட்டாள்.

"நம்ம வீட்டுக்குத்தான்..."

"நான் வரவில்லை..." வெடுக்கென்று கூறினாள் பாட்டி.

"அம்மா" கமலாவுக்கு தொண்டை அடைத்தது.மனம் கலங்கி வெதும்பியபடி மீண்டும் "அம்மா எங்களோட வாணை..." என்றாள்.

"நான் இங்கதான் இருப்பேன்... என்னை விட்டுட்டுப் போனீங்க... உங்கட அம்மா, உங்கட பாட்டி செத்திட்டா நான் வரவில்லை... இது தான்... என்ர ..வீடு... இங்க தான் என்ர சாவு..."

"ஏன் பாட்டியம்மா ...உங்கட பிள்ளைகள் தானே கூப்பிடுகினம்...? என்று பாட்டியை அன்போடு தடவினார் செயலாளர்.

"நீதான் என்ர பிள்ளை... எங்கே ராஜு" தம்பி தான் என்ர பேரன்... இவங்களா என்னை இத்தனை நாளாகப் பார்த்தாங்க?... நான் போகல்லை.

"அம்மா மன்னிச்சிடம்மா-அப்ப இருந்த நிலையில யோசிக்கலை... "கமலா அம்மாவைக் கட்டிக் கொண்டு அழுதாள்.கூட நின்றவர்களின் கண்களும் கலங்கின.

"பாட்டி வாங்க பாட்டி... இன்னிக்கு இருக்கிற மாதிரி வளர்ந்தவனாக இருந்திருந்தா நான் உங்களைத் தோளில் தூக்கி வந்திருப்பேன்... அப்ப நான் சின்னப் பெடியன்" என்று ரவி கெஞ்சினான்...'வாங்க பாட்டி...'

"நான் வரல்லை ...வரல்லை... வரல்லை.

ஊரை விட்டு வெளிக்கிடேக்கை பாட்டியை வரும்படி கேட்டனாங்கள்... அவ நடக்கமாட்டா. வாகனம் பிடிக்கிற வசதியும் இல்லை தூக்கிக் கொண்டாவது வாறதுக்கு எவ்வளவோ பாடு பட்டனாங்கள் முடியேலை... குட்டிப் பாட்டி தான்... இரும்பு மாதிரிப் பாரம்... வாசல் கேற்றுக்குத் தூக்கிக் கொண்டு வாறதுக்கிடையில் அப்பாவுக்கு களைச்சுது... பாட்டியும் கையைக் காலை அடிச்சா... "என்னை விட்டுட்டுப போங்கோ! என்று அழுதா. ரவியை மட்டும் என்னோட விட்டுட்டுப் போங்கோ" என்று அழுதா. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் என்ன செய்கிறது என்று தெரியவில்லை. ஊரே ஓடுகிறபோது நான் எப்படி பாட்டியோட நிக்கேலும்... நாங்கள் யோசிச்சுக் கொண்டிருக்கிற போதே ஒரு நாளும் செல் வராத எங்கட ஊருக்குள்ள செல்வந்து விழுந்தது. எங்கட வீட்டையும் தாண்டி போய் காது பிளக்கிற மாதிரி வெடிச்சிது...

ஒரே பரபரப்பு... நெஞ்சு பட படத்தது...

இனியும் நிண்டு மினைக்கடேலாது... போவோம்... என்றார் அப்பா. அம்மாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. செல் வெடிச்சதும் பாட்டியும் பயந்து போனா... ரவி... ரவி... என்னையும் கூட்டிக் கொண்டு போங்கடா...? முத்தத்தில் இருந்தபடியே கூப்பிட்டா. நானும் திரும்பி ஓடிப் போய் பாட்டியின்ர கையைப் பிடித்துக் கொண்டு அழுதன்.

இதற்கிடையில் இன்னொரு செல்லும் கூவிக்கொண்டு வரவே எல்லோரும் நிலத்தில விழுந்து படுத்தம்...மேலால போன செல் நாலாவது வீட்டில விழுந்து சின்னமாமாவும், பெரிய மச்சாளும் அதிலேயே துடிதுடித்துச் செத்துப் போவதாக அறிந்ததும் எல்லோரும் நல்லாய்ப் பயந்திட்டம்... இனியும் நிண்டு மினைகடேலாது எண்டு அப்பா சத்தம் போட்டார்.

உள்ளம் கொதி த்தது. ஏன் இந்தக் கொடுமை? நாங்கள் என்ன பாவம் செய்தம்? தப்பி ஓடக் கூட விடாமல் துரத்திச் சுடறானே! இதற்கிடையில் 'கிபிர்'குண்டு வீச்சு விமானம் பறந்து வந்தது.எல்லோரும் ஐயோ என அவலக்குரலெடுத்து அழுதபடி விழுந்து படுத்தம்.

கிளாலிக் கடல் பயணம் பயங்கரமான பயணம்... வள்ளத்திலையும் ஆட்கள் கூடுதலாக இருந்தம்... நடுக்கடலில வள்ளங்களை நோக்கி செல் வந்தது... எப்படியோ தப்பிப் பிழைச்சு வன்னிக்கு வந்து சேர்ந்தம்...

வழியெல்லாம எனக்கு பாட்டியின்ர நினைப்புத்தான். பாட்டிக்கு என்னில எவ்வளவு பாசம்! எல்லோரையும் விட என்னில தான் வாரப்பாடு. சின்னவயசில குட்டியா, குட்டியா எண்டு தூக்கிக் கொஞ்சுவா... நான் ஒவ்வொரு நாளும் பாட்டியோட தான் படுப்பன்... படிச்சு முடிச்சு படுக்கேக்க நல்ல கதை எல்லாம் சொல்லுவா... பாட்டியின்ர

கதையினை வாய் பிளந்தபடி கேட்பன்... பேய் வரும்...முனிவரும்... பிசாசு வரும்... கடைசியில எல்லாத்தையும் விரட்டினதாக கதை அளப்பா... வளர்ந்த பிறகு நானும் கதை எழுத வேணும் எண்ட ஆசை வரும்... பாட்டி சொல்லுற கதையில கன தெய்வங்கள் வரும்... வைரவர், வீரபத்திரர், காளி, ஐயனார், முனியப்பர், துர்க்கை எண்டு பல தெய்வங்கள் வந்து பயப்படுத்தும்.

கடைசியில சிவபெருமான் வந்து சுபமுடிவைக் கொண்டு வருவார்.

எனக்கு கனநாளாக ஒரு சந்தேகம். இறைவன் ஒருவன் எண்டு தானே எங்கட சமயமும் சொல்லு வது... பிறகேன் நூற்றெட்டுத் தெய்வங்களை வச்சு வழிபடுகினம்... எல்லாம் வெறும் பம்மாத்தோ எண்டு

எடுத்து அந்தியேட்டி செய்ய வேணும் எண்டு அம்மா ஒருநாள் சொன்னவ...கிட்டடியிலதான் பாட்டியை வன்னியில கண்ட தெண்டு ஆரோ சொன்னவை... அதுக்குப் பிறகுதான் தேட வெளிக்கிட்டணாங்கள்... அதிலையும் களைச்சு ஆச்சியின்ர கதை முடிஞ்சதெண்டு இருந்தம்... அப்ப தான் சுவிப் அடிச்ச மாதிரி இந்தப் பேப்பர்... ஒரு மாதிரி கஷ்டப்பட்டு ஆச்சியட்ட வந்திட்டம்...

ரவியின் மனக்கணனி ஒரு வினாடியில், முருகன் மயிலில் உலகைச் சுற்றி வந்தது போல் பாட்டியின் நினைவுகளை அசை மீட்டு வந்தது.

இல்ல உபசரிப்பாளர் ஜாமினி தேசிக்காய்த் தண்ணீர் கொண்டு வந்து பரிமாறினார். களைத்து வந்தவர்களுக்கு தேவாமிர்தம் போலிருந்தது.

"வாங்கோ பாட்டியைப் பார்ப்பம்..."

பாட்டியிடம் விடுதிக்குப் போய்க் கொண்டிருந்த போது கமலா, "கந்தசாமி ஐயா எங்கே?" என்று கேட்டாள்.

"ஐயா எங்களை விட்டுப் போய் ஆறுமாதமாச்சு... அவருடைய நினைவைச் சுமந்து கொண்டு, இந்த இல்லமும்,வளாகமும் எழிலையும், வருவாயையும் வாங்கிக் கொண்டிருக்கு. பெரும் காடாக இருந்த இந்த ஐந்தேக்கர் பூமியை இன்று பொன் விழாவையும் பூமியாக்கி விட்டு இந்த மண்ணுக்கு உரமாயிட்டார்... அவர் இறந்தாலும் அவரது பெயர் என்றென்றும் வாழும்..."

கதவடியிலும், ஜன்னல் வழியாகவும் பல முதிய முகங்கள் அவர்களை ஆவலோடும் ஏக்கத்தோடும் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பூந்தோட்டத்தின் அருகே வாங்கிலில் அமர்ந்து கொண்டு ஒருவர் பத்திரிகைச் செய்திகளை உரத்து வாசித்துக் கொண்டிருந்

# யூரோ 2004 'சி' குழுவில்

# இத்தாலி டென்மார்க் மோதல்

நடைபெறவிருக்கும் யூரோ 2004 உதைபந்தாட்டப் போட்டிகளின் "சி" பிரிவில் எதிர்வரும் திங்கட்கிழமை இத்தாலி டென்மார்க்கை எதிர்த்து மோதும்.





இத்தாலிய அணியின் பயிற்றுவிப்பாளர் கியோவன்னி தமது அணியில் இடம்பெறும் வீரர்களின் பெயரை அறிவித்துள்ளார்.

நான்கு வீரர்கள் பின்வரிசைக் கும் இரண்டு வீரர்கள் இடைவரி சைக்கும் ஒரு வீரர் மத்தியிலும் மூன்று வீரர்கள் முன்னணியிலும் விளையாடும் புதிய வியூகத்தை அறிமுகம் செய்யும் கியோவன்னி இம்முறையிலான ஆட்டத்தின் மூலம் இத்தாலி பல அதிர்ச்சிகர மான வெற்றிகளைப் பெற்றுள்ள தையும் நினைவுபடுத்தினார்.

1981ஆம் ஆண்டு உலகக் கிண் ணத்தை வென்ற இத்தாலி உலகின் முதல்தர உதைபந்தாட்ட அணிகளுள் ஒன்றாக விளங்கி வருகிறது. ஐரோப் பியக் கிண்ணத்திற்கான பயிற்சிப் போட்டிகளில் இத்தாலி மிகத் திற மையாக விளையாடியுள்ளது. (யே)

# இறுதிப் போட்டித் தொடரில்

# லேக்கர்ஸ் பரபரப்பான வெற்றி

தற்பொழுது நடைபெற்றுவரும் அமெரிக்கத் தேசிய கூடைப்பந் தாட்டப் போட்டியின் 5போட்டிகள் கொணட இறுதியாட்டததின் இரண்டாவது போட்டியில் லொஸ் ஏஞ் சல்ஸ் லேக்கர்ஸ் (**LA Lakers**) அணி பரபரப்பான வெற்றியை ஈட் டியது.





மூ ன் று தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற முதலாவது போட்டியில் டீற்றொயிற் பிஸ்டன் அணி யிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்த லேக்கர்ஸ் அணி நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் ஆட்டம் முடிவுற்ற போது 89-89எனும் சமநிலையில் போட்டியை முடித்தது.

பின்னர் வழங்கப்பட்ட மேலதிக 10நிமிட ஆட்டத்தில் புயல் வேகத் தில் விளையாடி 10-2எனும் புள்ளியடிப்படையில் போட்டியை வென்றது. லேக்கர்ஸ் அணியின் கோப் பிறையன்ற் 33புள்ளிகளைப் போட்டார். ஒரு கட்டத்தில் பிஸ்டன் அணி வெற்றிபெறும் நிலை யிலிருந்த போது பிறையன்ற் 3 புள்ளிகளைப் பெற்றுப் போட்டி யைச் சமப்படுத்தினர். (யே)

# உலக உள்ளக விளையாட்டில்

# ஜேஸன் கார்டினருக்குத் தங்கம்

தற்பொழுது புடாப்பெஸ்ட் நகரில் இடம்பெற்றுவரும் சர்வதேச உள்ளக மெய்வல்லுநர் போட்டி



களில் ஆண்களுக்கான 60 மீற்றர் குறுந்தூர ஓட்டத்தில் பிரிட்டனின் ஜேஸன் கார்டினர் முதலிடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கம் வென்றார்.

6.49 வினாடிகளில் இத்தூரத்தைக கடந்த அவர் அமெரிக்க வீரரான ஷோன் கிராபோட்டிடமிருந்து கடுமையான சவாலை எதிர்நோக்கினார். அச்சவாலின் காரணமாக உள்ளக விளையாட்டுப் போட்டி ஒன்றில் 60 மீற்றர் ஓட்டப்போட்டியல் சர்வதேச அளவில் முதலிடத தைப் பெறும் முதலாவது பிரித்தானிய வீரர் எனும் பெருமையைப் பெற்றார்.

அமெரிக்க வீரர் கிராபோட் இரண்டாவது இடத்தையும், கிரேக்க வீரர் தியரோடிஸ் மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

தனது வெற்றியைப் பயிற்றுவிப்பாளர் மல்கம் ஆர்னோல்டுக்குச் சமர்ப்பித்த ஜேஸன், உலகச சம்பியனாகும் எனது கனவு நனவாகியிருக்கிறது. இதற்குக் காரணகர்த்தா மல்கம்தான். எனது வெற்றியை அவருக்குக் காணிக்கையாக்குகிறேன் என்றார். (யே)



செக் குடியரசில் நடைபெற்றுவரும் உலக மெய்வல்லுநர் உள்ளக விளையாட்டுப் போட்டிகளில் உயரம் பாய்தலில் பங்கெடுக்கும் தென்னாபிரிக்க வீராங்கனை ஹெஸ்ரி கொலோற்ரியைப் படத்தில் காண்கிறீர்கள்.

# சைக்கிள் போட்டியில்

# பிரெஞ்சு வீரர் படுகாயம்

தற்பொழுது பிரான்ஸில் நடைபெற்றுவரும் டோ.ஃபின் நெடுந்தூர சைக்கிள் ஓட்டப்போட்டியின் மூன்றாவது சுற்றில் பிரெஞ்சு வீரரான மைக்கல் பீக்கன் 20மீற்றர் ஆழமான பள்ளத்தில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.



பிரித்தானிய வீரரான டேவிட் மில்லர், பிரெஞ்சுவீரர் பள்ளத்தில் வீழ்ந்து கிடப்பதை அவதானித்து அறிவித்த பொழுது ஹெலிக்கொப்டர் மூலம் அவர் மீட்கப்பட்டார். அவ்வேளை அவர் தமது சுயநினைவை இழந்திருந்த பொழுதும் பின்னர் அவருக்கு நினைவு திரும்பியதாக அறிவிக்கப்படுகிறது.

கடுமையான முறிவுக்காயங்களுக்கு ஆளாகியிருக்கும் பீக்கன், முடிவுக் கோட்டைக் கடப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் விபததுக்குள்ளானார்.

இன்னுமொரு பிரெஞ்சு வீரரான நிக்கொலஸ் போட்டல் தனது கன்னிப்போட்டியில் இரண்டாவதாக வந்தார். ஸ்பானிய வீரரான ஜொஸ் என் றிக் முதலிடத்தைப் பெற்றார். (யே)



சீனத் தலைநகர் பெய்ஜிங்கில ஒலிம்பிக் தீபம்

# விளையாட்டுச் செய்திகள்

# ரிம் ஹென்மனை வீழ்த்திய சுலோவோக்கிய வீரர் பெக்

தற்பொழுது குயீன்ஸ்பெக்கில் நடைபெற்றுவரும் பகிரங்க டெனிஸ் போட்டிகளின் இரண்டாவது சுற் றில் முன்னணி வீரர் ரிம் ஹென்மன் சுலோவோக்கிய வீரர் கரோல் பெக்கிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.



கடந்த வாரம் இடம்பெற்ற புற்றரை டெனிஸ் சுற்றுப்போட்டிகளில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுளள கரோல் பெக்க 6-2, 3-6, 7-6 (8/6)எனும் செற்றுக்கள் அடிப் படையில் ரிம் ஹென்மனை வீழ்த்தினார். தன்னை ஹென்மன் சுதா கரித்துக் கொண்ட போதும், போட்டியை அவரால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை.

இன்னும் இரண்டு வாரங்களில் ஆரம்பமாகவிருக்கும் விம்பிள்டன் போட்டிகளுக்குத் தயாராகும் ரிம் ஹென்மன் இநதத் தோல்வி மூலம் தொடர்ந்து விளையாட்டில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகளை இழந்துள்ளார். அவருக்குப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் இல்லாமற்போயிற்று. (யே)

# ஒலிம்பிக் வரலாறு ④

# 1908ல் லண்டன் நகரில்

# இடம்பெற்ற 4வது ஒலிம்பிக்

1908ஆம் ஆண்டு ரோம் நகரிலேயே ஒலிம்பிக் போட்டிகள் நடை



பெற ஏற்பாடாகியிருந்தது. ஆயினும வெசூவியஸ் எரிமலை வெடித்ததால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இத்தாலிக்கு ஏற்பட்டதால் இப் போட்டிகள் லண்டனுக்கு மாற்றப்பட்டது.

இரண்டாயிரம் வீரர்கள் கலந்து கொண்ட 100போட்டிகள் இங்கு இடம்பெற்றன. முதன்முதலில் வீரர்கள் தமது நாட்டுத் தேசியக்கொடியின் கீழ் அணிவகுத்து மைதானத்தினுள் நுழைந்தது லண்டனிலேயே இடம்பெற்றது. போட்டியின் தரம் இங்கு மிக உயர்வாக இருந்தபோதும் நடுவர்களின் தீர்ப்புக்குறித்து அமெரிக்கர்கள் மிகுந்த அதிருப்திக்குள்ளாகினர். இதனால் அடுத்துவரும் போட்டிகளில் பல்வேறு நாட்டு நடுவர்களைப் பயன்படுத்துவது என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தீர்மானித்தது.

அமெரிக்கர் அண்டர்சனுக்கும், சுவீடனின் மார்ச் டென்சனுக்கும் இடையில் நடந்த மல்யுத்தப் போட்டியில் சுவீடன் நாட்டு வீரர் காயமடைந்ததால், அமெரிக்க வீரர் அவரை ஒருநாள் ஓய்வெடுக்க அனுமதித்தார். 'விளையாட்டு வீரன் கனவான்' எனும் கூற்றை அவர் இதன் மூலம் நிரூபித்தார். மறுநாள் நடந்த போட்டியில் சுவீடன் வீரர் வெற்றி பெற்றார்.

21வகையான விளையாட்டுக்கள் இடம்பெற்ற இப் போட்டியில் ஐஸ் ஸ்கேற்றில், சைக்கிள் போலோ என்பன காட்சி நிகழ்ச்சியாக இடம்பெற்றன. மரதன் போட்டியில் இத்தாலிய வீரர் டொரண்டோ பியற்சி மைதானத்துள் முதலில் நுழைந்த போதும் பலமுறை மயங்கி வீழ்ந்து எழும்பி ஓடினார். அதிகாரிகள் அவரைக் கையைப் பிடித்து வெற்றிக்கோட்டைத் தாண்ட உதவியமையால் அவர் தகுதியிழந்தார்.அமெரிக்க வீரர் ஜோன ஹெயிஸ் வெற்றியடைந்த போதும் டொரண்டோ மிகப் பிரபலமானார். (யே)

# இந்து சமயத்தின் மையம்

## வெள்ளி நற்சிந்தனை

**கலாநிதி கவிஞர் வி. கந்தவனம்**

தனி ஒருவரால் தொடக்கி வைக்கப்படாத பெருஞ் சமயம் இந்து சமயம். எப்பொழுது தொடங்கப்



பட்டது என்பதையும் சொல்ல முடியாத சமயம் அது. அத்தோடு பற்பல தெய்வங்களை வணங்குகின்ற சமயமும் அதுதான்.

சரி இவை பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்தவைதான். இவற்றைத்தவிர இந்து சமயத்தைப் பற்றி வேறு என்ன எங்களுக்குத் தெரியும்? சொல்ல முடியுமா? அவைபற்றிச் சிந்தித்ததுண்டா?

### பெருமை மிகு சமயம்

பாற்கடலில் வாழும் மீன்களுக்குப் பாலின் அருமை பெருமைகள் தெரிவதில்லை. அதுபோல் இந்து சமயத்தில் பிறந்து இந்து சமயத்திலே வாழும் எங்களுக்கும் அதன் இயல்புகளோ சிறப்புகளோ பெரிதாகத் தெரிவதில்லை. தெரிய வேண்டும் என்று முயன்றாலும் கூட முடிவதில்லை. எமக்குமட்டுமா? ஞானிகளுக்கும் அதே நிலைதான். ஞானிகளுக்குமட்டுமா? தேவர்களுக்கும் தெளிவில்லாத சமயம் எங்கள் சமயம். அப்படிச் சொல்லும் போது திருமாலையும் பிரமாவையும் நினைத்துச் சொல்கின்றேன்.

இந்து சமயம் போற்றும் மும்மூர்த்திகளுள் சிவபெருமான் ஒருவர். அவரது அடியைக் காணத் திருமாலால் முடியவில்லை. முடியைக்காண வேதங்களில் வல்ல பிரமதேவராலும் முடியவில்லை. அத்தகையவர்களுக்கு இந்து சமயம் எப்படி விளங்க முடியும்?

அந்த அளவுக்கு இந்தச்சமயம் ஆழமானது அகலமானது. ஆழக் கடலின் ஆழமில்லாத கரையோரத்தில் நின்றவாறு வலையை வீசுகிறேன். அலையோடு அள்ளுண்டு வந்து அகப்பட்டவற்றுள் கஞ்சல் குப்பைகளை வீசிவிட்டு எஞ்சியவற்றைக் கழுவித் துடைத்துத் தருகின்றேன்.

இதனை முதலில் மனதில் இருத்திக் கொண்டு தொடர்ந்து படியுங்கள். சிறியதோ பெரியதோ நிச்சயம் ஏதாவது பலன் கிடைக்கும். இந்து சமயத்தின் தனித்துவமான இயல்புகளில் என்னை மிகவும் கவர்ந்தது அதன் சுதந்திரம். அதாவது அது எமக்கு வழங்கும் உரிமைகள்.

'சுதந்திரம் என்றால் தனது விருப்பத்திற்கமைய தனது இயல்புகளையும் திறமைகளையும் கூட்டுமொத்தமான ஆளுமையையும் வளர்த்தெடுக்க ஒருவருக்கு இருக்கக் கூடிய உரிமையுடமை.

இந்து சமயம் என்றதும் நாம் வணங்கும் தெய்வத்தின் பெயர் தான் எமக்கு முதலில் நினைவிற்கு வருகிறது. அது இயல்பு தான். ஆனால் இந்து சமயம் கடவுளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இன்னுஞ் சொல்லப்போனால் கடவுகளிலும் மனிதனுக்குத் தான் இந்து சமயம் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.

### மனமே அடிப்படை

இந்த முக்கியத்துவம் மனித மனதிலிருந்து ஆரம்பமாகிறது. இந்து சமயத்தின் மையப்புள்ளியே மனம்தான். மனமே கடவுள். உடல் தான் கோயில். "உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்'' என்றார் திருமூலர். மனதுக்கு எமது சமயம் முக்கியத்துவம் கொடுக்கின்றதென்றால் மனம் போகும் போக்கெல்லாம் போகலாம் என்பதல்ல. உண்மையில் மனதைக் கட்டுப்படுத்துவதே உள்நோக்கமாகும்.

கட்டுப்பாடு எப்படிச் சுதந்திரமாகும் என்கிறீர்களா? சமயக்கட்டுப்பாடு அடக்குமுறையன்று. மனத்தைக் கட்டுப்படுத்தி மனிதனுக்கு நல்வாழ்வை அளிக்கவே சமயம் முயலகிறது. கட்டுப்பாட்டோடு கூடிய சுதந்திரம் தான் மனித சுதந்திரம். கட்டுப்பாடற்ற சுதந்திரம் மிருக சுதந்திரம்.

மனம் மனத்தைக் கட்டுப்படுத்தும் சுதந்திரமும் மனதுக்குத் தான் வழங்கப்பட்டுள்ளது. வேறு ஒன்றுக்கோ வேறொருவருக்கோ அல்ல. அதனால் இது அடக்குமுறையாகாது. சமயம் எந்த வகையிலும் மனிதனை அடக்க முயல்வதில்லை. □

## மின்சாரம் வழங்கப்படவில்லை

(சரசாலை)

சரசாலையில், சாவகச்சேரி பிரதேச சபை உபஅலுவலகம் உள்ள பகுதிக்கு இதுவரை மின்சார இணைப்பு வழங்கப்பட வில்லை.

இந்தப் பகுதியில் பாடசாலைகள் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## பண்ணையாளர்களுக்கு தொழில் சார் போட்டிகள்

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்திலுள்ள கால்நடைப் பண்ணையாளர்களிடையே தொழில்சார் போட்டிகளை நடத்தக் காலநடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஆடு, மாடு, கோழிப் பண்ணையாளர்களிடையே நடைபெறவுள்ள இப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஒவ்வோரு பிரதேசங்களுக்குமான கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-35)

## பதவி உயர்வு

(பருத்தித்துறை)

இலங்கை மின்சார சபையின் பருத்தித்துறை அலுவலக மின் அத்தியட்சகர் எஸ்.செல்வச்சந்திரன் உதவி மின்பொறியியலாளராக இலங்கை மின்சாரசபையால் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை மின்சாரசபை (வடக்கு) பிரதிப்பொது முகாமையாளர் அலுவலகத்தில் புதிய பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

பருத்தித்துறை மின்சாரசபைமின் அத்தியட்சகராக எஸ். சிதம்பரநாதன் பொறுப்பேற்கவுள்ளார். (உ-52)

## மிதிவெடி அகற்றல்

(இணுவில்)

மருதனார் மடம் - உரும்பிராய் வீதியின் வடக்குப்புறமாக உள்ள விவசாயக் காணிகளில் மிதி வெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் நீண்டகாலமாக அகற்றப்படாது இருந்ததனால் அப்பகுதி விவசாயிகள் எதிர்கொண்டு வந்த பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு மேற்படி நிலப்பரப்பிலுள்ள மிதிவெடிகளை அகற்றித்தருமாறு இணுவில் கிழக்கு விவசாயிகள் சம்மேளனத்தினர் விடுத்த கோரிக்கைகளுக்கு இணங்கவே ஹலோடிரெஸ் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(உ-122)

## வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

பொலிகண்டி கந்தவனம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி சப்பறத திருவிழாவும் 1,2ஆம் திகதிகளில முறையே தேர், தீர்த்த உற்சவங்களும் இடம்பெறவுள்ளன. (உ-52)

# மாவீரர்களின் தியாகமே சமாதான சூழலுக்கு எம்மை இட்டு வந்துள்ளது

## கடற்புலிகளின் தளபதி சூசை உரை

இன்றைய சமாதானச் சூழ்நிலையினை ஏற்படுத்தித் தந்தவர்கள் மாவீரர்கள் என்ற உண்



மையை யாரும் மறுக்க முடியாது என்று கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முல்லைத் தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் நடைபெற்ற மாவீரர் வீரவேங்கை சுகு நினைவுக் கணனிக் கட்டடத் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே சூசை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,

இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற ஈழத் தமிழர்கள் மதிக்கப்படுவதற்கும் கெளரவிக்கப்படுவதற்கும் நிரந்தரமாக வாழ்வதற்குமான சூழ்நிலையை எற்படுத்தித் தந்திருப்பது தமிழீழ விடுதலைப் போராட்டம். 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்ட எமது வரலாறு இந்தத் தியாகங்களால் தான் சர்வதேச ரீதியாக ஈழத் தமிழர்களை உயர் நிலையில் பார்க்கின்றார்கள்.

1995 ஆம் ஆண்டு 5 இலட்சம் தமிழ் மக்கள் ஒன்றாக யாழ். குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்தபோது திரும்பிப் பார்க்காத சர்வதேசம் இன்று வன்னிக்கு வந்திருப்பதன் காரணம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியே. இந்த வெற்றிக்கான அடிக்கல்லை நாட்டியவர்கள் மாவீரர்களே.

ஜயசிக்குறு, ஓயாத அலைகள் ஒன்று, இரண்டு, மூன்று நடவடிக்கைகளின வெற்றிகளுக்கெலலாம் அக்காலப்பகுதிகளில் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆளுகையின் கீழ் இருந்த வன்னிப் பகுதியில் இருந்த 3 இலட்சம் மக்களிடம் இருந்து தான் போருக்கான படைத்திரட்டல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் ஸ்ரீலங்கா அரசு ஒன்றரைக்கோடி மக்களிடம் இருந்து படைத்திரட்டலை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதலை மேற்கொள்ள முன்வந்து தோல்வி கண்டது.

மட்டக்களப்பில் இடம்பெறுகின்ற படுகொலைச் சம்பவங்களுக்குப் பின்னணியில் ஸ்ரீலங்கா படைத்தரப்பு செயற்பட்டு வரும் நிலையிலும் சமாதான நடவடிக்கைகள் சுமுகமாக இடம் பெறுகின்றன. இந் நிலைப்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிக்கொணர வேண்டும்.

இன்றைய சூழலில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் அரசியல் ரீதியாக அரசாங்கத்தின் நிலை, எதிர்க்கட்சியின் நிலை உள்ளிட்ட ஒவ்வொருவருடைய முகத்திரையையும் வெளிக்காட்டும் வகையில் செயற்படல வேண்டும என்றார். (உ-121)

# லயன்ஸ் கழகங்களூடாக 14,543 மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி மாவட்டங்களில் உள்ள 92 லயன்ஸ் கழகங்களில் 17 கழகங்கள முன்னெடுத்த கண் பார்வைத் திட்டத்தின் கீழ், கடந்த 2003 ஆம் ஆண்டு மே மாதத்திற்கும் கடந்த மே மாதத்திற்கும் இடையிலான ஒரு வருட காலத்தில் 14 ஆயிரத்து 543 மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி 72 இலட்சத்திற்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர, 685 மூக்குக் கண்ணாடிச் சட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கடந்த வருடம் புரிந்த சிறந்த சேவைகளைப் பாராட்டி சர்வதேச லயன்ஸ் கழக விருது வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-16)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 20 முன்பள்ளிகளைப் பொறுப்பேற்றது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 20 முன்பள்ளிகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்றுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட முன்பள்ளிச் சிறார்களின் கல்வி மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டே இவ்வாறு 20 முன்பள்ளிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்றுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பொறுப்பேற்கப்பட்ட 20 முன்பள்ளிகளிலும் உள்ள குறைபாடுகள் நிவிர்த்தி செய்யப்பட்டு சகல வசதிகளுடனும் கூடிய கல்வியை சிறாருக்கு வழங்குவது இதன் நோக்கமாகும்.

இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்ட சிறார்களின் முன்பள்ளிக் கல்வி முறையில் பாரிய மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-4,61)


உலக சுற்றுச் சூழல் தினம் ஜூன் –05



World Environment Day- June-05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழம்.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

ஏறத்தாழ 4000 மீன் இனங்கள் முருகைக்கற் பாறைகளுக்குரிய இனங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இது கடல் மீன் இனங்களில் கால் வாசிப் பங்கு ஆகும்.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல: 4

## குடும்பம்

என்னுடன் பிறந்தவர்கள்: ஜீவாட்சி அம்மாள், கமலாட்சி அம்மாள், மதுசூதன சிவம், கிருபானந்தவாரி, உமாமகேஸ்வரி, ஸ்ரீசைலவாசன், திருமாமணாளசிவம், சச்சிதானந்தசிவம், மயூரநாதசிவம், கேதாரீஸ்வரி, திருப்புகழ்மணி. ஏகாதாச உருத்திரர்கள் போல் பதினொருவர்.



## என் பிறப்பு

பராபவ ஆண்டு ஆவணித் திங்கள் 9ம் நாள் (1906) சஷ்டி திதி ஸ்வாதி நட்சத்திரத்தில் நான் பிறந்தேன். நாம நட்சத்திர எழுத்து 'ரு'. அதனால் என் தந்தையார் எனக்கு நாம நட்சத்திரப் பேராக ''கிருபானந்தவாரி'' என்று தொட்டிலில் இட்டுப் பேர் சூட்டினார்.

## இளமைப் பருவம்

எனக்கு மூன்றுவயது முடிகின்றபோதே என்னுடைய தந்தையார் எழுத்து அறிவித்தார். ஐந்து வயது நிரம்பியபோதே நூல்களை எடுத்து நானே படிக்கத் தொடங்கினேன். என் பிதா என்னைப் பள்ளிக்கு அனுப்பினால் குணநலன்கள் அமையா என்று கருதி வீட்டில் வைத்தே இன்ன இன்ன பாடங்கள் இன்ன இன்ன நேரத்தில் படிக்க வேண்டுமென்று வரையறை செய்து எனக்குப் பாடம் சொல்லுவார்

அதிகாலையில் அவர் எழுந்து பிடில் வாசிக்கத் தொடங்குவார். அந்த ஒலியைக் கேட்டு நானும், என் தமையனாரும் எழுந்து கைகால்களை அலம்பிக்கொண்டு அவருக்கு முன்னே உட்கார்ந்துகொள்வோம். ஒரு மணிநேரம் இசைப்பயிற்சி தருவார். காலை 7 மணிக்கு மேல் நன்னூல் முதலிய இலக்கணங்களைக் கற்பிப்பிப்பார். நண்பகலில் உணவுக்குப் பின் தேவாரம், திருப்புகழ், சரித்திரக் கீர்த்தனைகள் முதலியவற்றை அவர் கையால் எழுதிக் கொடுத்து மனப்பாடம் செய்து ஒப்புவிக்க வேண்டுமென்று கட்டளையிடுவார். இரவு நேரத்தில் சரித்திரப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பார்.

இவ்வாறு இளமையில் துள்ளித் துடித்து விளையாடுகின்ற காலத்தில் பள்ளிக்கு அனுப்பாமலும், விளையாடவிடாமலும் ஒரு கணநேரமும் வீணடிக்காமலும் கலைப் பயிற்சியிலேயே எங்களை வளர்த்தார்.

எனக்குப் பத்து அல்லது பன்னிரண்டு வயது நிரம்பியபோதே பதினாயிரம் பாடல்கள் மனப்பாடம் ஆகிவிட்டது. அது தான் என் வாழ்நாளில் அமைந்த பெருஞ்செல்வம், தந்தையார் கல்வி கற்பித்ததோடு நில்லாமல் ஒழுக்க நெறியை அதிகமாக உணர்த்தினார்.

எனக்கு எட்டு அல்லது ஒன்பது ஆண்டிலேயே வெண்பாப் பாடுகின்ற ஆற்றல் அமைந்தது. ''புலவருக்கு வெண்பா புலி'' என்று கூறுவார். கடினமான வெண்பா பாடுகின்ற ஆற்றல் அமைந்ததனால் விருத்தம் முதலான பாடல்கள் பாடல்கள் சரளமாக இயற்றத் தொடங்கினேன். இளமைத் துடிப்பினால் அஷ்ட நாக பந்தம், மயில் பந்தம், வேல் பந்தம், சிவலிங்க பந்தம் முதலிய சித்திரக் கவிகளையும் பாடி மகிழ்வேன். என்னிடத்தில் எவ்வித தீய பழக்கங்களும் அணுக விடாமல் தந்தையார் எச்சரிக்கையாகப் பாதுகாத்து வந்தார். எங்களுக்குப் பாடம் சொல்லுவதிலேயே அவருடைய நேரத்தை அதிகம் செல வழித்தார்.

பொன் வேலை செய்யும் ஆசாரி பொன்னைத் தட்டி ராவி இழுத்து அணிகலமாகச் செய்வதுபோல் தந்தையார் எங்களைத் தண்டித்தும் கண்டித்தும் கலை நலத்தை அளித்து வந்தார். இளமையிலேயே சிறிய கூட்டங்களில் என்னை விரிவுரை செய்யுமாறு செய்தனர். ''குல வித்தை கல்லாமல் பாகம்படும்'' என்பது போல் தந்தையார் செய்யும் விரிவுரைகளைக் கேட்டுக் கேட்டே எனக்குப் பாதி வித்தை படிக்காமலேயே எய்தியது.

பிரசங்கம் செய்வது கடினமான தொழில் என்று கருதி என் தந்தையார் ஒரு முறை நவராத்திரி விழாவில் என்னை மைசூருக்கு அழைத்துக்கொண்டு சென்று வீணை சேஷண்ணாவிடம் 30 ரூபா விலையில் ஒரு வீணை வாங்கிக்கொடுத்தார். பின்னர் சென்னையில் நாட்டுப் பிள்ளையார் கோயில் தெருவில் வசிக்கும் ஒரு ஆசிரியரிடம் சில மாதங்கள் வீணை கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார்.

என் தந்தையார் தாம் விரிவுரைக்குச் செல்லும் ஊர்களுக்கு என்னையும் அழைத்துக் கொண்டு போய்த் தாம் செய்யும் விரிவுரைகளை என்னைக் கவனமாகக் கேட்குமாறு செய்தார். சிறிது காலத்திற்குப் பின் அவருக்கு நான் பின்பாட்டுப் பாடிக்கொண்டிருந்தேன். அவர் புராணப் பிரசங்கம் செய்யும் பொழுது கையேடு வாசிப்பேன்.

## தீட்சை

எனக்கு ஐந்து வயதிலேயே எங்கள் வீரசைவக் குலநெறிப்படி திருவண்ணாமலை பாணி பாத்ர தேவர் மடத்தில் சிவலிங்கதாரணம் செய்விக்கப்பட்டது. அதன் பிறகு தந்தை யார் சடக்கர மந்திரம் உபதேசித்தார்.

பின்னர் மதுரை திருப்புகழ் சுவாமிகள் காங்கேய நல்லூருக்கு எழுந்தருளியிருந்த பொழுது, அன்று அருணகிரிநாதருடைய ஆராதனை விழா; முருகன் ஆலயத்தில் வைத்து சூக்கும சடக்கர மந்திரத்தை உபதேசித்து அருளினார்.

நீண்ட நாளைக்குப் பிறகு திருஞானசம்பந்தர் இறையுடன் கலந்த பெருமணநல்லூர் என்னும் ஆச்சாள் புரத்திலே மகா சிவராத்திரியன்று, பழநி சைவ, சித்தாந்தசரபம் சிவத்திரு ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் குண்டமண்டலங்கள் இட்டு சிவாகம விதிப்படி எனக்கு நிர்வாண தீட்சை செய்தருளினார். அப்பொழுது எனக்கு ''வாமதேவசிவம்'' என்ற தீட்சாநாமம் கொடுக்கப்பட்டது.

பழநி ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் சிவாகமங்களில் வல்லுநர். சைவ சித்தாந்த நூல்களின் கரை கண்டவர். சீலமும், சைவக் கோலமும் உடையவர். அடியேனிடத்தில் அன்பு கொண்டிருந்தார்.

(தொடரும்)

# யாழ். திருமறைக் கலாமன்றத்தில் ஜூலையில் இசை நாடக விழா

(கொழும்புத்துறை)

யாழ.திருமறைக் கலாமன்றத தின் ஏற்பாட்டில் மாபெரும் இசை நாடகவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 2,3,4ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இதில் புகழ் பெற்ற இசை நாடகங்கள் மேடையேற்றப் படவுள்ளதுடன்,

இறுதி இரு தினங்களும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 வரை இசை நாடகம் தொடர்பான கருத்தமர்வுகள் இடம்பெற்றுள்ளன.

வருடா வருடம் நடாத்தப்படும் தமிழ் விழாவில் இம் முறை இசை நாடகத்திற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, ஜூலை 9,10, 11ஆம் திகதிகளில் திருமறைக கலாமன்றத்தின் ''ஞான சவுந்தரி'' இசை நாடகமும் அரங் கேறவுள்ளது.

சுமார் 12 வருட இடைவெளிக்குப்பின் மீண்டும் ஞான சவுந்தரி இசை நாடகம் மேடையேறுவது குறிப்பிடத்தக்கது.

(உ-51)

# க.பொ.த. உயர்தர பாடமாக தொடர்பு சாதன தொ.நு. கல்வி

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அடுத்த வருடம் முதல் தொடர்புசாதன தொழில்நுட்ப கல்வி அறிமுகப்படுத்தவுள்ளது.

கலை, வாணிபம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் கற்கும் மாணவர்களிற்கு இப்பாடங்களைப் போதிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக இப்பாடத் திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் இது பரீட்சைக்குரிய பாடம் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-4,61)

# நடைபாதைக் கடைகள் நேற்று அகற்றப்பட்டன

யாழ்.நகரில் உள்ள நடைபாதைக் கடைகளை அகற்றும் நடவடிக்கை நேற்றும் தொடர்ந்தது.

போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த நடை பாதைக்கடைகளின் தளபாடங்கள், விளம்பரப் பலகைகள் போன்றவற்றை அகற்றும் பணியில் யாழ்.மாநகரசபை ஊழியர்களும், பொலிஸாரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ். வீதி ஆகிய பகுதிகளிலே அகற்றப்பட்ட பொருட்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்வதைப் படத்தில் காணலாம்.

இதேவேளை நேற்று முன்தினம் இந்தப் பணி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-19)





படம் : ஐ.ஐங்கரன்

பேராசிரியர் துரைராசா ஞாபகார்த்த சங்காபிஷேகம்

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராசா அவர்களது 10வது நினைவுதினத்தினை முன்னிட்டு 11.06.2004 வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நவோத்திர சக்கர சங்காபிஷேகம் (1009) நடைபெறவுள்ளது. பி.ப. 4.30 மணியளவில் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்.

(8570) தகவல் : ச.க.தனேந்திரன்

# மடுக்கரைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் இடிந்து விழும் நிலையில்

(மன்னார்)

மன்னார் மாவட்ட முருங்கன் மடுக்கரைக் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பாவனைக்கு உதவாத நிலையில் அங்கு தங்கியுள்ள மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமற்று உள்ளன.

இது குறித்து மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

2000,2001ஆம் ஆண்டுகளில் போர் காரணமாக வீடு வாசலை இழந்து, நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வந்த மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்காக முருகன் மடுக்கரைக் கிராமத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு சபையின் (RRAN) நிதியைக் கொண்டு வீடுகள், வீடமைப்பு அதிகாரி சபையினால் நிர்மாணிக்கப்பட்டு இவ்வீடுகளில் மக்களும் குடியேற்றப்பட்டனர்.

மூன்று வருடகால எல்லைக்குள் இவ்வீடுகளின் சுவர்களிலும் அத்திரவாரங்களிலும் வெடிப்பேற்பட்டு வீடுகள் இடிந்து விழும் நிலை உருவாகியுள்ளது. இவ்வீடுகளில் குடியேற்றப்பட்ட மக்கள் உயிராபத்து நேர்ந்துவிடலாமென்ற பயத்துடன் வீடுகளை விட்டு வெளியேற நோக்கம் கொண்டுள்ளனர்.

இவ்வீடுகளின் தற்போதைய தரத்தை நிர்ணயிக்கக் கூடிய குழு ஒன்றைக் கொழும்பில் இருந்து இக்கிராமத்திற்கு அனுப்பி வைத்து வீடுகளைத் தர நிர்ணயம் செய்து இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ள ஆபத்தான வீடுகளிலிருநது மக்களை வெளியேற்றுவதுடன் மற்றைய வீடுகளையும் திருத்தி உறுதிப்படுத்தும் நடவடிக்கையை எடுப்பதன் மூலம் இக்கிராமத்தில் வரப்போகும் மழை காலத்தில் உயிராபத்துக்களே அன்றேல் வேறு அனர்த்தங்களோ எழாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல். - குறள்

## வலம்புரி

## ஆட்சியை தீர்மானிக்கும் அரிய சந்தர்ப்பம்

சிறுபான்மைப் பலத்துடன் ஆட்சிப் பீடமேறிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பலத்தைப் பாராளுமன்றத்தில் நிரூபிக்க முடியாமல் தத்தளிக்கின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை நம்பிக் கெட்டு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைக் கேட்டுப் பார்த்து எல்லாம் தோற்ற நிலையில் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களை இழுக்கும் முயற்சியும் தோற்றுப் போய் கையறுநிலையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பலத்தை பாராளுமன்றத்தில் நிரூபித்துவிட முடியும். இதனைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதற்கான அழைப்பை விடுத்தார்.

இதனிடையே பாராளுமன்றத்தில் உள்ள எல்லா எதிர்க் கட்சிகளும் ஒன்றிணைந்து நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் கூட்டம் கூடி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிரான தீர்மனங்களை எடுத்துள்ளன. எதிர்க் கட்சிகளின் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜாதிக ஹெல உறுமயவும் கலந்து கொண்டமை ஆச்சரியமான உண்மை.

தமிழர்களின் உரிமைகளை நசுக்குவதற்காக, சமாதானப் பேச்சைக் குழப்பி இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை நிலைநாட்டுவதற்காக அரசியலில் ஈடுபட்டு பாராளுமன்றம் சென்ற கட்சியே ஜாதிக ஹெல உறுமயவாகும்.

தமிழர்களின் விடயத்தில் ஜே.வி.பி. எத்தகைய கொள்கையைக் கொண்டுள்ளதோ அதற்கு ஒரு படி மேலாக தமிழர்களின் விடயத்தில் மிகமோசமான கொள்கையைக் கொண்ட ஓர் இனவாதக் கட்சியே ஜாதிக ஹெல உறுமய என்பது உலகறிந்த உண்மை.

தமிழ்க் கூட்டமைப்பைப் பார்த்து விடுதலைப் புலிகள் பாராளுமன்றத்திற்குள் வந்துவிட்டார்கள் எனக் கூறிய ஜாதிக ஹெலஉறுமய இப்போது மட்டும் அரசை எதிர்ப்பதற்காக 'எந்த எதிர்க் கட்சியுடனும் சேரத் தயாரென அறிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் இந்த அறிவிப்புக்குப் பின்னர் தமிழ்க் கூட்டமைப்பினர் எதிர்க் கட்சிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டமை தீர்க்கதரிசனத்தோடு எடுக்கப்பட்ட முடிவா? என்பதை காலத்தின் அசைவுகளே தீர்மானிக்கும்.

பாராளுமன்றத்தில் வைத்து இரண்டு பிக்கு எம்.பிக்களை ஆளும் கட்சி உறுப்பினர்கள் தாக்கியதன் காரணமாகவே அரசை எதிர்ப்பதற்காக எதிர்க் கட்சிகளுடன் சேர்வதென்ற தீர்மானத்தை ஜாதிக ஹெல உறுமய எடுத்திருந்தது. இதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் தனித்தியங்கப் போவதாகவும், அரசுடனோ அன்றி எதிர்க் கட்சியுடனோ சேரப் போவதில்லையெனவும் கூறிய ஜாதிக ஹெல உறுமய தனக்கு ஏற்பட்ட கௌரவப் பிரச்சினைக்காக இப்போது எதிர்க் கட்சிகளோடு சேர்ந்துள்ளது.

இந் நிலையில், அந்தக் கட்சியின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு முண்டு கொடுப்பது சரியானதா? என்பது நிதானமாகச் சிந்தித்து எடுக்கப்பட வேண்டிய முடிவாகும்.

தமிழ்க் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அவர்கள் எதிர்க் கட்சியில் இருப்பதால் எந்தத் தவறும் இல்லை. ஆனால் ஜாதிக ஹெலஉறுமய பங்கு பற்றாதவிடத்து எதிர்க் கட்சிகளுடன் சேர்வதற்கு கூட்டமைப்புத் தயாரென நிபந்தனை விதிக்கப் போவது அரசியல் ரீதியில் எடுக்கக் கூடிய சிறந்த முடிவாக இருக்கும்.

ஆனால், இது பற்றி எந்தச் சிந்தனையும் இன்றி தமிழ்க் கூட்டமைப்பு, எதிர்க் கட்சிகள் கூடிய கூட்டத்தில் ஜாதிக ஹெல உறுமயவுடன் சேர்ந்து பங்கு பற்றியுள்ளது.

இதற்கு மேலாக இப்போது ஜனாதிபதியின் அழைப்பு. எதுவாயினும் சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கு விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட அடிப்படை விடயங்களை யார் நிறைவு செய்கிறார்களோ அவர்களுக்கே எமது ஆதரவு என்பதைத் தமிழ்க் கூட்டமைப்பு வெளிப்படையாகக் கூறி நிபந்தனை விதிக்க வேண்டும். ஏனெனில் தற்போது ஆட்சியைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமே இருக்கின்றது.

## வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைக்கு முற்றுப்புள்ளி

(கொழும்பு)

இலங்கை மின்சார சபைகளின் அதிக சம்பளம் கொடுத்து வெளிநாட்டு நிபுணர்களை ஆலோசகர்களாக நியமிக்கும் நடவடிக்கை விரைவில் தடுத்து நிறுத்தப்படும் என மின் சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில்பிறேம ஜயந் தெரிவித் துள்ளார்.

இலங்கையின் சிறந்த பொறி யியலாளர்கள் இருக்கும் போது வெளி நாட்டு நிபுணர்கள் ஆலோசனையைப் பெறுவதற்காக மாதாந்தம் 70 இலட்சம் ரூபாவரை செலவிடப்பட்டு வருகின்றதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் மிசார சபைகளில் இலங்கையில் உள்ள பொறியியலாளர் களே நியமிக்கப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (உ-60-10)

## பல்கலைக்கழக மோதல்கள் இனிமேல் இடம்பெறமாட்டா ஜனாதிபதி உறுதிமொழி

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் ஏற்படும் மோதல்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் எதிர்காலங்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவனின் பெற்றோர்,உறவினர்களைச் சந்தித்து அனுதாபம் வெளியிட்ட வேளை ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில் மாணவர்கள் மத்தியில் சமூகவிழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு விசேட திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அவற்றை விரைவில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றார். (உ-60,10)

## சிறுவர் நாடக அரங்க போட்டி முடிவுகள்

(இணுவில்)

உடுவில் கல்விக் கோட்டத்தில் உள்ள தரம் II, தரம் III பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சிறுவர் நாடக அரங்கப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**தரம் II**

1ஆம் இடம்: கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி, 2ஆம் இடம்: இணுவில் இந்துக் கல்லூரி, 3ஆம் இடம்: மான்ஸ் மகா வித்தியாலயம்.

**தரம III**

1ஆம் இடம்: உடுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, 2ஆம் இடம்: ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தி, 3ஆம் இடம்: ஏழாலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை. (உ-122)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீங்கள் எல்லையற்ற ஆன்மா என்பதை ஒருமுறை நிச்சயம் செய்து கொள்ளுங்கள். அது உண்மையானால் நீங்கள் உடம்பு என்பது பொய். நீங்கள் ஆன்மா அதை உணர வேண்டும் . ஆன்மா தன்னை ஆன்மாவாக பார்க்கவேண்டும். இப்போது ஆன்மா தன்னை உடம்பாகப் பார்க்கிறது. அது நிற்க வேண்டும் இந்த அனுபூதி வரத் தொடங்கியவுடனேயே நீங்கள் முக்தர்களாகி விடுவீர்கள்.

சுவாமி விவேகானந்தர்

## சிறுவர் துஷ்பிரயோக செய்திகளை வெளியிடுவது பற்றி பத்திரிகைகளுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செய்திகளை வெளியிடும் பத்திரிகையாளர் களின் போக்கில் மாற்றம் ஏற்பட வேண்டும் என யுனிசெவ் கேட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தி னம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது யுனி செவ் நிறுவன அதிகாரிகள் இந்நக் கருத்தை வெளியிட்டுள் ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் சம் பந்தமான செய்திகளை பத்தி ரிகையாளர்கள் வெளியிடும் போது மிகுந்த பொறுப்புணர்ச்சி யுடனும் அவர்களின் எதிர் கால நலன் குறித்து கவனத் தில் கொண்டு நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் மேலும் கேட்டுக் கொண்டார்கள் (உ-60,10)

## நாவன்மைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(சரசாலை)

சரசாலை இந்து மன்றத்தினரால் நடாத்தப்பட்ட சமய நாவன்மைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**பாலர் பிரிவு:**

1ஆம் இடம்: த.மிதுலா (மட்டுவில் கமலாசினி வித்தி), 2ஆம் இடம்: பா.பகீரதன் ( சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) 3ஆம் இடம்: சி.தேனுஷா (சரசாலை ஸ்ரீ கணேச வித்தி)

**ஆரம்பப் பிரிவு:**

1ஆம் இடம்: சி.கார்த்திகா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), 2ஆம் இடம்: ஜெ.சரண்யா ( சாவகச்சேரி இந்து ஆரமபப் பாடசாலை, 3ஆம் இடம்: ஜெ.அனோஜா, கு.லக்ஷிகா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

**கீழ்ப் பிரிவு:**

1ஆம் இடம்: சி.மகிழினி (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), 2ஆம் இடம்: தி.திரிசனா ( சரசாலை ஸ்ரீ கணேச வத்தி) 3ஆம் இடம்: ச.சாயிசன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

**மத்திய பிரிவு:**

1ஆம் இடம்: லோ.மயூரதி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), 2ஆம் இடம் லோ.மயூரி ( சாவகசசேரி இந்துக் கல்லூரி) 3ஆம் இடம்: வி.ஜெனார்த்தனி (மட்டுவில் கமலாசனி வித்தி)

**மேற் பிரிவு:**

1ஆம் இடம்: த.யுலுக்கன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்: க.டயானி ( மட்டுவில் கமலாசனி வித்தி) 3ஆம் இடம்: ம.வித்தியா (சரசாலை ஸ்ரீ கணேச வித்தி) (உ)

## புலிகள் மீதான தடையை நீக்குக!

### திருமாவளவன் கோரிக்கை

(சென்னை)

தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்க வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாட்டின் திருநெல்வேலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் முக்கியமான காலகட்டத்தை எட்டியுள்ள நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பது அவசியமற்றதெனவும், இது தொடர்பாக மத்திய அரசாங்கம் தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்யையிலுள்ள சிறுபான்மையின மதத்தவர்களின் உரிமைகளுக்கு ஆதரவளிப்பதென தனது குறைந்தபட்ச பொது நிகழ்ச்சித் திட்டவரைவில் மத்திய அரசு கூறியுள்ளதை தாம் வரவேற்பதாகத் தெரிவித்த திருமாவளவன், இலங்கையின் சிறுபான்மையின மக்களின் உரிமைகள் தொடர்பாகவும், இதே நடைமுறையினை மத்திய அரசு கையாள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார. (உ-10)

# மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளித்தே அரசை வீழ்த்த முயலவில்லை

## ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு.

(நமது நிருபர்)

கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பினை நாம் மதிப்பதனாலேயே பெரும்பான்மைப் பலமற்ற தற்போதைய அரசைக் கவிழ்ப்பதற்கு எதிர்க் கட்சியினர் முயலவில்லையென முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கருஜயசூரியா நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்துள்ளார்.-

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதற்காகவே கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசைத் தெரிவு செய்துள்ளனர். அதனை நாம் மதிப்பதனாலேயே அரசாங்கத்தின் நல்ல செயற்பாடுகளை ஆதரித்து வரும் அதேவேளை அரசின் வன்முறைகளைக் கண்டிக்கின்றோம்.

அண்மையில் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வன்செயல்கள் தொடர்பாகச் சட்டம் ஒழுங்கைப் பேணும் வகையில் விசாரணை நடத்துமாறு பாராளுமன்றச் சபாநாயகரிடம் அனைத்து எதிர்க் கட்சிகளும் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஆனால், அரசாங்கத்தை வீழ்த்திவிட்டு ஆட்சி அமைக்கும் நோக்கம் எமக்கு ஒருபோதும் இல்லை. இந் நிலையில் மக்களின் தீர்ப்பினை நாம் வெகுவாக மதித்து வருகிறோம என்றும் கருஜயசூரியா தெரிவித்துள்ளார். (ம)

## பாதுகாவலர் சங்க பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இர்ாணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிகு யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## போராளிகள் வீரச்சாவு

(கிளிநொச்சி)

கடந்த 30.07.2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் ஏற்பட்ட வெடிவிபத்தின் போது நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடற்கரும்புலி லெப்டினன் கேணல் கில்லறி அல்லது முருகேசன் என அழைக்கப்படும் கணேசன் சிவகுருநாதன்(மூத்த விநாயகர் கோவிலடி ஆனைக் கோட்டை),

கடற்கரும்புலி மேஜர் இசை நிலவு அல்லது மதிவண்ணன் என அழைக்கப்படும் கந்தசாமி தனேந்திரன்(தோப்புக்காடு காரை நகர் யாழ்ப்பாணம்),

கடற்கரும்புலி மேஜர் புகழினி என அழைக்கப்படும் வடிவேல் விஜயராணி(இலங்கை துறைமுகத் துவாரம் ஈச்சிலம் பற்றை மூதூர்),

கடற்கரும்புலி மேஜர் தனி சுடர் அல்லது பூவிழி என அழைக்கப்படும் இராசலிங்கம் மலர் விழி(பாடசாலை முன்பாக வேரவில் பூநகரி மன்னார்) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

(காரைநகர்)

அரச திணைக்களங்களில் பெருத்தமான பதவிகளுக்கு வேலையற்ற பட்டதாரிகளை பிரதேச செயலக ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 10 மணிக்கு ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.(ச-246)

# பாலத்தின் கீழ் இருந்து இராணுவ தொலைத் தொடர்பு சாதனங்கள் மீட்பு

(பதுளை)

இரவு நேரத் தொலை நோக்கி மற்றும் தொலைத் தொடர்பு சாதனம் உட்பட பல இராணுவ உபகரணங்களை மாலுயாப் பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

பதுளை-செங்கலடி ஏ-5 வீதியில் உள்ள மாலுயாப் பாலத்தின் அருகில் இருந்து இவை கைப்பற்றப்பட்டுள்ளன. செய்மதி தொழில் நுட்பத்தின் ஊடாக இயங்கும் ஜி.பி.எஸ். சாதனம்,வரைபடங்கள், தொலைநோக்கி, தொலைத் தொடர்புச் சாதனங்கள் என்பனவே கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து இவை மீட்கப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் கல்கிசைப் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து ஆயுதங்களுடன் நால்வரைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மாத்தளைப் பொலிஸ் பிரிவில் ஆயுதங்களைத் தயாரித்து விற்பனை செய்துவந்த கிராம வாசி ஒருவரும் கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-4,61)

# தமிழீழ காவல் துறையின் வளர்ச்சியில் சர்வதேசம் வியப்படைந்துள்ளது.

## காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன்

(கிளிநொச்சி)

கடந்த பதின்மூன்று ஆண்டு காலத்துக்குள் சர்வதேசமே கூர்ந்து வியந்து பார்க்கும் அளவிற்கு தமிழீழ காவல்துறை வளர்சி பெற்றமைக்கு மக்களின் பூரண ஒத்துழைப்பே காரணம் என்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று மன்னார் அடம்பனில் நடைபெற்ற தமிழீழக் காவல்துறையின் பணிமனைத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சமூக உரிமைகள் சகலரையும் சென்றடையும் வகையிலும் சமூக விடுதலையை சமகாலத்தில் பேணும் வகையிலும் தமிழீழ காவல்துறை அமைப்பு எமது மண்ணில் நிறுவப்பட்டுள்ளது.

சமூகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அர்ப்பணிப்புடன் இந்தப் பணியில் செயற்பட்டு வருகின்றார்கள். இதற்கு எமது மக்களும் பூரண ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றார்கள். இலங்கைக் காவல் துறை, நீதி - நிர்வாகம் - சட்டத் துறை என்பன மக்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க முடியாது உள்ளன.

அத்துடன் எமது தாயக பிரதேசங்களின் கலாசாரத்தைச் சீரழிக்கும் வகையில் இலங்கை காவல்த்துறையினர் உடந்தையுடன் செயற்பட்டு வருவதாக தெரிவித்துள்ள காவல்துறைப் பொறுப்பாளர், எமது தாயகப் பிரதேசங்களில் மக்கள் நிம்மதியான வாழ்வியல் சூழலுக்குள் இருக்கின்றனர். இதற்கு எமது காவல் துறையினரின் அர்ப்பணிப்பும், மக்களின் ஒத்துழைப்புமே முக்கிய காரணங்கள் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளின் தரத்திலான முன்னணிக் காவல்துறை அமைப்பாக எமது தமிழீழ காவல துறை அமைப்பையும் கட்டி எழுப்ப வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திய தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் காவல் துறைச் செயற்பாடுகளில் மக்கள் கருத்துக்க்ளையும் விமர்சனங்களையும் தொடர்ந்தும் தெரிவிக்க வேண்டுமெனவும் அவர் கூறினார். (ச-121)

# பத்தரமுல்லையில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு; இருவர் பலி

(கொழும்பு)

பத்தரமுல்லைச் சந்தியில் நேற்று அதிகாலை பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் கொழும்புத் தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியில் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியை நிறுத்துமாறு பொலிஸார் சைகை காட்டினர். ஆனால் அந்த வண்டி நிறுத்தப்படவில்லை. அத்துடன் பிரஸ்தாப முச்சக்கர வண்டியில் இருந்து பொலிஸார் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இருவர் கொல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்டவர்களால் செலுத்தி வரப்பட்ட முச்சக்கர வண்டி கொள்ளையிடப்பட்ட வண்டியென பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ-121)

## எதிர்க் கட்சிகள்...

படுத்தியுள்ளமை துரதிஷ்டவசமானது. எனவே நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காகவும் பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுவதற்காகவும் எதிர்க் கட்சிகள் இணைந்து செயற்படுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4,61)

## இடைக்கால...

பதுடன் இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையை விடுதலைப் புலிகளிடம் முன் வைத்தபோது அவர்கள் அதனை ஏற்கவில்லை என்றும் இதனால் இப் போது இறுதித் தீர்வுக்கான நிபந்தனைய நீக்கிவிட்டு விரைவில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.பேச்சுவார்த்தைகளுக்கான திகதியை நோர்வேயே தீர்மானிக்கும்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடர்பில் ஜே.வி.பியுடன் நாம் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளோம்.அவர்களைத் திருப்திப்படுத்துவது அரசின் கடமையாகும். ஆனால் ஏனைய சிங்களப் பேரினவாதிகளையும் சமாளிக்க வேண்டியவர்களாகவும் உள்ளோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பாக அரசாங்கம் இப்போது நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர்களுக்குரிய நட்ட ஈடு கொடுக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இது பெரும்பாலும் அடுத்து வரும் மூன்று மாத காலத்திற்குள் பூர்த்தியாகுமென்றும், கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலை தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றோம். அங்கு தற்போது இடம் பெற்று வரும் சம்பவங்களுக்கும் இராணுவத்திற்கும் தொடர்பு இருப்பதாகவும் சில தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

இத்தகைய சம்பவங்கள் மேலும் தொடருமாக இருந்தால் அது சமாதானப் பேச்சுவார்த்தையை மேலும் பாதிக்கும். எனவே இதனை மேலும் தொடர விடமாட்டோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்றத்தின்...

இதன் அடிப்படையிலேயே எதிர்க் கட்சக்குத் தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்குகின்றது.

இடைக்கால தன்னாட்சி அதிகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தின் ஊடாகத் தீர்வொன்றை பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் தமிழரசுக் கட்சி அதனை சர்வதேச சமூகத்தின் மத்தியில் முன் வைக்குமெனவும் சேனாதிராசா மேலும் சுட்டிக்காட்டினார்.(த-121)

அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக திட்டவட்டமான பதில் எதனையும் ஜனாதிபதி தெரிவிக்காத போதும், இது சம்பந்தமாகவும் விரைவில் முடிவெடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருப்பதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றைய சந்திப்புக்கு கூட்டமைப்பின் சார்பில் இரா. சம்பந்தன் தலைமை தாங்கினார். எம்.கே.சிவாஜிலிங்கம் வெளிநாடு சென்றிருப்பதாலும், எஸ்.ஜெயானந்தமூர்த்தி சுகயீனம் காரணமாகவும் இச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. ஏனைய 20 எம்.பிக்களும் கலந்து கொண்டனர்.

அரச தரப்பில் ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் மங்கள சமரவீர, சிறிபாலடிசில்வா, சுசில் பிரேம ஜயந் ஆகியோரும் கலந்து கொணடனர். இப்பேச்சு வார்த்தை நேற்றிரவு 8.45 மணியளவில் ஆரம்பமாகி நள்ளிரவு 12.30 மணிவரை நீடித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வேகக்...

பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சடலத்தைப் பார்வையிட்ட பருத்தித்துறை பதில் நீதிவான் எஸ்.குமாரசாமி சடலத்தைப் பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறும் சாரதியை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்

சடலம் மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளையினால் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டபின் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.(உ-150,52)

## யாரைத்...

தேரரும் கொலன்னாவே சுமங்கல தேரரும் வன்முறைகள் எதுவும் நடைபெறாத நிலையிலும் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.. இது யாரைத் திருப்திப்படுத்துவதற்கொன்பது எனக்குப் புரியாமல் இருக்கிறது. பிக்கு எம்.பிக்கள் எதிர்த் தரப்பு எம்.பிக்களை தகாத வார்த்தைகளால் தூசித்ததை தொலைக் கட்சியில் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். ரவுடிகள் போல் அவர்கள் காட்சியளித்தனர். இவ்வாறு வண.புண்ணியானந்த தேரர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (த-6)


# வேலணை பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்வி எமது சபையால் கோரப்படுகின்றது.

| இல. | வேலை விபரம் | கேள்விவைப்பு பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்கப்படமாட்டாதது) |
| --- | --- | --- | --- |
| 01. | செல்வநாயகம் வீதி, வேலணை. | ரூபா 3700/- | ரூபா 750/- (வற் உள்ளடங்கலாக) |

01. கேள்விப் படிவங்களினை 2004.06.14 ஆம் திகதி தொடக்கம் 2004.06.21 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை அட்டவணையிலுள்ள தொகையினைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்களின் இரு பிரதிகள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை இட்டு "செயலாளர், வேலணை பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2004.06.23 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விபரத்தை எழுதுதல் வேண்டும்.
03. கேள்விகள் 2004.06.23 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தோர் சமூகமளிக்க வேண்டும்.
04. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
05. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**செல்லப்பா சண்முகராஜா(ஜே.பி.)**
செயலாளர்,
வேலணை பிரதேச சபை.

[C226]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.